Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1049)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 05 திங்கட்கிழமை (21.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 51



12



08




14



06

# இன முரண்பாடுகளைக் களைவதற்கு ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரை

## நடைமுறைப்படுத்தவும் வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் இன முரண்பாடுகள் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்கு நிறுவன மற்றும் அரசியல் ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பணிகள் வெற்றியடையுமெனவும் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பல்வேறு தரப்பினராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட் இன்று

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட பிரேரணைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் என்ற முறையில் இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கையை 2016 ஆம் ஆண்டளவில் ஆசியாவிலேயே முதன்மையான நாடாக மாற்றும் திட்டத்தின் முன்னோடியாக இந்த வரவு செலவுத் திட்ட பிரேரணை அமையும் என அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் 65 ஆவது வரவு செலவுத் திட்டம் என்பதுடன் 7 ஆவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது வரவு செலவுத் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள முக்கிய பகுதிகள் மறைக்கப்படுமா?

## சந்தேகிக்கிறது கொழும்பு வார இதழ்

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ள போதிலும், 400 பக்கங்களைக் கொண்ட அந்த அறிகையை அவர் முழுமையாக வெளியிடுவாரா என கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று சந்தேகம் வெளியிட்டுள்ளது.

உணர்ச்சிபூர்வமான தகவல்கள் அடங்கிய பகுதிகளை நீக்கிவிட்டு அறிக்கையை அவர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும் அந்த வார இதழ் உயர்மட்ட வட்டாரங்களை ஆதாரம்காட்டி தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த வார இதழில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலியில் கடந்தவாரம் இடம்பெற்ற கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கில் உரையாற்ற வந்திருந்த அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலர் றொபேட் ஸ்கெர், பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதன்போது அவர் இரண்டு சந்தர்ப்பங்களில் இலங்கை தொடர்பான ஒபாமா நிர்வாகத்தின் கொள்கை தொடர்பாக மனித உரிமை விவகாரங்களுககு பதிலளிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும், நல்லிணக்க முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டியது தொடர்பாகவும் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்.

இலங்கைக்கு அமெரிக்கா கண்ணிவெடிகளை அகற்றுதல்,

(15 ஆம் பக்கம் பார்க்க)

# வரவு செலவுத் திட்டத்தின் நோக்கம் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதே

(கொழும்பு)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இன்றைய தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் வாழ்க்கைச் செலவு குறைப்பதையே நோக்கமாகக் கொண்டதென பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு எம்.பி. உட்பட பலர் ஆளுந்தரப்பிற்கு பாய்ச்சல்?

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இன்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலர் ஆளுங்கட்சியில் இணையவுள்ளனர் என தகவல் வெளிவந்துள்ளன.

இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் லங்கா சீ நியூஸ் இணையம் நேற்றைய தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த ஜனாதிபதி தேர்தல் 2015 இல் இடம்பெறலாம்?

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலை 2015 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதியின் பின்னர் 2015 இல் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிடவுள்ளதாகவும் தெரியவருகிறது.


2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது ஜனாதிபதி பதவிக்காலத்திற்காக சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் அரசியலமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி சத்தியப் பிரமாணத்தின் 4 வருடங்களுக்கு பிறகு ஜனாதிபதி தேர்தலை நடத்தலாம்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள

(15 ஆம் பக்கம் பார்க்க)

# பிரச்சினைகளை உரிய முறையில் கூட்டமைப்பு இனங்காண மாட்டாது

## கூறுகிறார் இராணுவத் தளபதி



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரச்சினைகளை உரியமுறையில் இனங்காணும் என்பதை எதிர்ப்பார்க்க முடியாது என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய, தம்மை சந்தித்த பிரான்ஸின் தூதுவரிடம் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர்ந்தவர்களின் காணிகளை போலி ஆவணம் மூலம் விற்ற குழு கைது

(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழர்களின் காணிகளை சட்டவிரோதமாக கைப்பற்றி, போலி ஆவணங்களின் மூலம் விற்பனை செய்து வந்த குழுவொன்று பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

போலி ஆவணங்களின் மூலம் தமது காணிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக புலம்பெயர்ந்தவர்கள் பலரும் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

புலம்பெயர்ந்து சென்ற 15 இற்கும் அதிகமான தமிழர்கள் இதுபற்றிய முறைப்பாடுகளைச் செய்திருந்தனர். இதுதொடர்பாக விசாரணை நடத்திய குற்றப்புலனாய்வுப் பணியக அதிகாரிகள் கிருலப்பனையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கிங்ஸ்லி கோஸ்தா என்ற பெயருடைய அந்த வர்த்தகர், புலம்பெயர் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான தொம்பேயில் உள்ள 72 ஏக்கர் காணியை சட்டவிரோதமாக கைப்பற்றி போலி ஆவணம் தயாரித்து

(15 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் சிறுவன் மீது துஷ்பிரயோக முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கண்டி வீதியிலுள்ள உணவகமொன்றில் சிறுவன் ஒருவனை துஷ்பிரயோகப்படுத்த முற்பட்டவேளை, குறித்த சிறுவன் அங்கிருந்து தப்பிவந்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்து துஷ்பிரயோக முயற்சியில் ஈடுபட முயற்சித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை

(15 ஆம் பக்கம் பார்க்க)

# வேலணை வைத்தியசாலையின் தேவைகள் குறித்து ஆராய்வு




(வேலணை)

வேலணை வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கக் கூட்டம் அண்மையில் நிர்வாக சபைத் தலைவர் பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிர்வாகசபை உறுப்பினர்களும், வைத்திய அதிகாரி கு.பாலச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் வேலணை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை, வேலணை வைத்தியசாலை அபிவிருத்தி சம்பந்தமாக சுகாதார பிரதிப் பணிப்பாளர் கே.கேதீஸ்வரனுடன் தொடர்புகொண்டு வைத்தியசாலையின் அனைத்துப் பற்றாக்குறைகளையும் 2012 ஆம் ஆண்டளவில் நிறைவேற்றித தரவேண்டுமென மனு கையளிக்க இருப்பதாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பகுதி இயங்குவதற்கான தாதியர் பற்றாக்குறையும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. (85)

# வழிமறித்துத் தாக்கியோரை கைது செய்தனர் பொலிஸார்



(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றுகொண்டிருந்த இளைஞனை வழிமறித்துத் தாக்கிய 4 பேர் கொண்ட குழுவொன்றை யாழ்பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நல்லூர் ஆசிர்வாதப்பர் வீதி பகுதியில் நேற்று மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்றது. மதுபோதையில் நின்ற மேற்படி குழுவினர் வீதியால் சென்ற இளைஞனை வழிமறித்துத் தாக்கியுள்ளனர். சம்பவம் தொடர்பாக தகவலறிந்த யாழ். பொலிஸார் குறித்த இளைஞனைத் தாக்கிய 4 பேரையும் கைதுசெய்துள்ளனர்.

இப்பகுதியில் மதுபோதையில் நிற்கும் இளைஞர்கள் வீதியால் செல்லும் பெண்களுடன் சேட்டையில் ஈடுபடுவதுடன் இளைஞர்கள் மீது தாக்குவதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# புதுக்குடியிருப்புப் பிரதேச மக்கள் மழையினால் பெரும் அவலம்

(புதுக்குடியிருப்பு)

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக புதுக்குடியிருப்பில் இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களே தங்கள் தறப்பாள் வீடுகளிலும், தகரக் கொட்டகைகளிலும் மழை வெள்ளம் காரணமாக மிகுந்த சிரமததிற்குள்ளாகியுள்ளனர்.

வெள்ளம் வழிந்தோடாது நிற்கும் நிலங்களில் உள்ள மக்களின் வீடுகள் ஈரலிப்பான நிலையில் இருப்பதனால் இரவு வேளைகளில் உறங்குவதற்குக் கூட அவர்கள் பல அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர். மழை காலங்களில் பெருக்கமாகக் காணப்படும் நட்டுவக்காழி மற்றும் விஷ யந்துக்களினாலும் அல்லற்படுகின்றனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு காற்றுடன் கூடிய மழையால் தரப்பாள் மற்றும் தகரங்கள் தூக்கி வீசப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ.ப)


# நாகவிகாரைக்கு பிரதமர் விஜயம்



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் டி.எம். ஜயரட்ன நேற்று முன்தினம் யாழ். ஆரியகுளம் பகுதியிலுள்ள ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த மத்திய ஸ்தானத்திற்குச் சென்று வழி பாடுகளில் ஈடுபட்டார்.

விகாரையின் பீடாதிபதி விமல சிறி தேரரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டதுடன் தொடர்ந்து அமைச்சர் அவர்களின் யாழ்.தலைமைச் செயலகத்திற்கு விஜயம் செய்து அமைச்சருடன் கலந்துரையாடினார். இதன் போது ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆகியோர் உடனிருந்தனர்.

# நெல்லியடியில் இரவு வேளை நான்கு கடைகள் உடைப்பு



(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திருடர்களால நான்கு கடைகள் உடைக்கப்பட்டு பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம இடம்பெற்றுள்ளது. அன்றைய தினம் இரவு குறித்த பகுதியிலுள்ள நான்கு பலசரக்குக் கடைகளை உடைத்த திருடர்கள் கடைகளில் இருந்த பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர். இதனால் அப்பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பிரதேச வணிகர் கழகத்தினால் வர்த்தகர்களிடம் இருந்து பெறப்பட்ட நிதியில் வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் வணிகர் கழகத்தினால் தனியார் பாதுகாப்புச் சேவையும் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு வர்த்தகரிடம் இருந்தும் 500 ரூபாவீதம் அறவிடப்படுவதாகவும், இவ்வாறான பாதுகாப்புச் சூழலில் இத் திருட்டு இடம்பெற்றிருப்பது ஆச்சரியமாக உள்ளதாக வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

# தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் விஞ்ஞான தினமும், டிஸ்கவரி நூல் வெளியீடும்



தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் விஞ்ஞான தினமும் டிஸ்கவரி நூல் வெளியீடும் பாவலர் துரையப்பாப் பிள்ளை மண்டபத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது. விஞ்ஞானமன்றத் தலைவர் பா.புஸ்பகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல் விரிவுரையாளர் கு.லகிதரனும், சிறப்பு விருந்தினராக வலிகாம கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.விஜேந்திர சர்மாவும் கலந்துகொண்டனர்.

நூல் வெளியீட்டின்போது முதற்பிரதியினை யாழ். போதனா வைத்தியசாலை பல் வைத்தியர் செல்வி அ.காயத்திரி பெற்றுக்கொண்டார். மகாஜன கல்லூரியின் முதல்வர் வேல்சிவானந்தன், பிரதி அதிபர் சயந்தன், வாழ்த்துரைகளை வழங்கினர். இந்நிகழ்வின் தொடரச்சியாக மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. டிஸ்கவரி நூலின் ஆய்வுரையினை யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் இரா. செல்வவடிவேல் நிகழ்த்தினார். நூலின் இதழாசிரியர் செல்வன் கி.நிரேஸ் ஏற்புரை வழங்கினார்.

# ஊர்காவற்றுறையில் வறிய குடும்பங்களுக்கு விரைவில் வீடமைப்புத் திட்டம்

## யாழ். அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் இருக்கின்ற வறிய குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் வெகு விரைவில் ஆரம்பிக்கபபடவுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். ஊர்காவற்றுறைப் பிரதேசததில் கலைநிகழ்வுகளை ஊக்குவிக்கும் முகமாக பிரதேச செயலகத்தால் நேற்று நடத்தப்பட்ட கலை இலக்கியத் பெருவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டத்தில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. தற்போது 10 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பிரதேசத்தில் வதியும் வறிய குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும். அதேவேளை கலாச்சாரப் பிரிவுகள மாவட்டத்தின் அடிப்படையில் ஊக்குவிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சு.சண்முகரட்ணம், கரவெட்டிப் பிரதேச செயலர் சத்தியசீலன், ஊர்காவற்றுறை கடற்படைப் பொறுப்பதிகாரி கப்டன் டி.எம்.எல்.ஏ.திசாநாயக்க, ஊர்காவற்றுறை இராணுவப் பொறுப்பதிகாரி லெப். கேணல் ஏ.எம்.எஸ்.பிரேமவன்ச, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.எச்.எம்.ஹேரத் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள என பலர் கலந்துகொண்டனர். (85)

# தற்காலிக வீடமைப்பிற்கு தெரிவானோரின் விபரம் வெளியீடு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் கிராமசேவையாளர் பிரிவில் டி.ஆர்.சி. நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள தற்காலிக வீடமைப்பிற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் விபரம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு - காட்டாமணக்கு விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள 2 ஆம் வடடாரம் கிராமசேவகரின் அலுவலகத்திலேயே மேற்படி பயனாளிகளின் பெயர் விபரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

கோம்பாவில் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள், தங்கள் பெயர் விபரங்களைப பார்வையிடலாம் எனவும், அப்பகுதிக் கிராமசேவையாளர் தர்மராஜா தெரிவித்துள்ளார். (அ.ப)

# வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நடைமுறை தொடர்பாக வடமாகாண ஆளுநர்களுடன் கலந்தாலோசித்ததைத் தொடர்ந்து அவர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபா வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார். (எஸ்)

அது அவரது தனிப்பட்ட கருத்து என ஒதுக்குகிறோம், ஆனால் உலகத்தில் எந்த சீர்திருத்தமும் முதலில் ஒரு தனிப்பட்ட நபரின் கருத்தாகத்தான் இருக்கும்.

- எமர்சன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நம்புவதே வழி என்று நம்புவோம்!

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் டி.எம். ஜயரட்ன, கல்வித்தரத்தில் வளர்ச்சியடைந்த நாங்கள், எங்களிடையே உள்ள பிரச்சினைகளை ஏன் பேசித் தீர்த்துக்கொள்ள முடியாது என்று கேள்வி எழுப்பிவிட்டுப் போயிருக்கிறார்.

அவர்களெல்லோரையும் விடவும் அறிவில் வளர்ந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் நமக்கே இந்தக் கேள்வி அதிகம் உறைக்க வேண்டும் என்பதுண்மைதான்.

ஆனால் அவர்கள் வெட்கப்படுமளவுக்கு நாங்கள் வெட்கப்படுகிறோமா? மற்றவர்களோடு பேசுவதில் சிரத்தை எடுத்துக்கொள்கிறோமா? பேச்சுக் கலையை சரிவர கையாண்டு வெற்றிகரமாகத் தெரிந்திருக்கிறோமா? பிணக்கைத் தீர்ப்பதற்கு பேச்சு கருவியாக முடியும் என்பதை நம்புகிறோமா? என்றெல்லாம் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

நாம் பேசிப் பார்த்தோம். எதிர்த் தரப்பு பேச்சைப் புரிந்துகொள்வதாக இல்லை. எனவே, அவர்களுக்குப் புரியும் விதமாக வன்முறையால் பேச ஆரம்பித்தோம் என்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். சரி வன்முறையால் முடியவில்லை என்று கண்டுகொண்ட பிறகு, அடுத்து என்னதான் வழி வைத்திருக்கிறோம்.

பேச்சு சரிவரவில்லை, சத்தியாக்கிரகம் சரிவரவில்லை, அகிம்சை சரிவரவில்லை, ஆயுதம் சரிவரவில்லை என்றெல்லாம் சொல்கிறோமே தவிர இதையெல்லாம் சரியாகத்தான் செய்தோமா என்று கேட்டுப் பதில் தேடியிருக்கிறோமா? வழிமுறைகள் எல்லாம் பிழைத்துப் போனதென்றால், நம்மிடமும் ஏதேனும் பிழை இருந்திருக்குமோ என்று யோசித்துப் பார்க்க மாட்டோமா?

நமது பிரச்சினை இன்னும் தீராததற்கு, இத்தனை மக்கள் அழிக்கப்பட்டதற்கு, இன்றும் மக்கள் அவலங்களுடன் வாழ்வதற்கு காரணமாக நாங்கள் சிங்களத் தரப்பை மட்டும்தான் சொல்கிறோமா? பலப் பலரையல்லவா பழிசொல்லிக் கொண்டிருக்கிறோம். நம் துன்பங்களுக்குக் காரணமானவர்களென நம்மிடமிருக்கும் பட்டியல் மிக நீண்டதல்லவா?

இலங்கை அரசு, சிங்கள மக்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், நமக்குள்ளேயே நாம் காலத்துக்குக் காலம் வகைப்படுத்தும் துரோகத் தமிழர், இந்தியா, அமெரிக்கா, ஐ.நா, பாகிஸ்தான், இஸ்ரேல், வியட்நாம், ரஷ்யா, உக்ரைன், ஈரான், சீனா, லிபியா, கியூபா, மியான்மார், மலேசியா, அவுஸ்ரேலியா... என்று நமக்கு விரோதம் செய்பவர்கள் பட்டியல் மிக நீண்டுகொண்டே செல்வதல்லவா?

ஆயுதப் போராட்டம் தோற்றுப் போனதற்கும் நாம் மேலுள்ள அத்தனை பேரையும் காரணம் சொல்லுகிறோமல்லவா? கூடவே உயிர்ப்பயத்தில் ஊடு பார்த்து ஆமியிடம் ஓடிப்போன சனத்தையும், வெளிநாடுகளில் தீக்குளித்து சாகத் தயாராயிருந்தவர்கள் போதவில்லை என்பதையும், கப்பல்கள் ஏரோப்பிளேன்களோடு காப்பாற்ற வராமல் போனவர்களையும், கடைசி நேரம் செல்போன்களை மூடிவைத்து விட்டு ஓடி ஒளித்த கூட்டமைப்பு எம்.பிமாரையும், பான் கீ மூனை, நம்பியாரை, கருணாநிதியை, சோனியாவை என்று பலரையும் காரணம் சொல்லி முடித்தோமல்லவா?

நமது தோல்விக்கும், அவலங்களுக்கும் – நம்மிடமும் ஏதேனும் காரணங்கள் இருக்குமா என்று நாம் தேடிப் பார்த்ததுண்டா? யாரும் நமக்குச் சார்பாக இல்லை, யாரும் நம் பிரச்சினையை வந்து தீர்ப்பதாக இல்லை என்றால்... நம்மிடம் என்ன குறை இருக்கக் கூடும் என்று நாம் யோசிக்க மாட்டோமா?

ஆமாம், நாம் தான் வழிகண்டாக வேண்டும். கடந்த கால கோபங்களை, வெறுப்புக்களை, துன்பங்களை கைவிடுவதற்கும், எதிர்காலத்தை உத்தேசித்தும் இணைந்த நல்வாழ்வை ஏற்படுத்திக் கொள்வதற்குமான புதிய வழிமுறைகளுக்குள் நாம் பிரவேசிக்க வேண்டும்.

எதுவும் நடக்காதென்பதற்குக் காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதும், குறை கண்டு கொண்டிருப்பதுமல்ல; இங்கிருந்து நகர சரியான திசை வழியைக் கண்டுகொள்வதே நம் பொறுப்பாகும். இந்த நாட்டுக்குள் வாழ்வதற்கு, இந்த நாட்டு மக்களுடன்தான் முதலாயும் விளக்கமாயும் பேசியாக வேண்டும். பேசி நம் வாழ்வை வெல்வதற்கான இந்தப் பாதையையும் நாமேதான் முனைந்து உருவாக்கியாக வேண்டும்.

- ஆசிரியர்

# பாதாளக்குழு உறுப்பினர் குடுலாலுடன் லண்டனில் ரணில் என்ன பேச்சு?

## அமைச்சர் மேர்வின் சில்வா கேள்வி

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவருடன் லண்டனில் பேச்சுவார்த்தை நடத்தியதாக பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா குற்றஞ் சுமத்தியுள்ளார்.

களனி பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவரான குடு லால் என்பவருடன் ரணில் நான்கு மணித்தியாலயம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அதன்போது என்ன விடயம் பேசப்பட்டது என்பதனை ரணில் விக்ரமசிங்க அம்பலப்படுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை ஈடுசெய்ய போதைப் பொருளைக் கடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா? அல்லது சஜித் பிரேமதாசவைத் தீர்த்துக் கட்டுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். குடு லால் என்பவரைத் தாம் பாதாள உலகக் குழு உறுப்பினராகக் கருதுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

குடு லால் என்பவருக்கும் ரணிலுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை குறித்து பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடமும் முறைப்பாடு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். போதைப்பொருள் வர்த்தகர் என ஐக்கிய தேசியக் கட்சியினால் மேடைகளில் முத்திரை குத்தப்பட்ட நபருடன் கட்சித் தலைவர் என்ன பேசினார்?

இது தொடர்பில் ரணில் விளக்கமளிக்க வேண்டும் அல்லது கைவலங்குடன் என்னிடம் வரவேண்டும். நான் அவரை வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்கின்றேன் என்றார்.

## தெஹிவளை மிருகக் காட்சி சாலைக்கு வெளிநாட்டு மிருகங்கள் இறக்குமதி

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து, தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்கு, ஆபிரிக்க யானையொன்றும், இரண்டு ஆண் ஒட்டகச் சிவிங்கிகளும், நீர்யானைகள் மற்றும் பெங்குயின்கள் ஆகியன கொண்டுவரப்படவுள்ளதாக மிருகக்காட்சிச் சாலைகள் திணைக்களப் பணிப்பாளர் பாஸ்வர சேனாங்க தெரிவித்துள்ளார்.

மக்களை அதிகளவில் கவர்ந்துள்ள தெஹிவளை மிருகக்காட்சி சாலையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையும் தற்போது மேற்கொள்ளப்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிருகக்காட்சிச் சாலையில் உள்ள உள்ளக வீதிக் கட்டமைப்பை நவீனமயப்படுத்தவும் விசேட தேவையுடைய நபர்கள் இலகுவாக பயணிக்கக்கூடிய வகையில் வசதிகளை ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மிருகக்காட்சிச் சாலையின் உணவகங்கள் மற்றும் கழிவறை கட்டமைப்பின் நிர்மாணப்பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் புதிய வீடுகள் தீவகத்தில் திறந்து வைப்பு

(தீவகம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தீவகத்தில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட புதிய வீடுகள் நேற்றுக் காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

ஈஸ்வரராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபை உபதலைவர் சி.கார்த்திகேசு, தேசிய இளைஞர் சேவை அதிகாரி திருமதி வினோதினி ஸ்ரீமேனன் மற்றும் வேலணைப் பிரதேச சபை உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 30 வயதிற்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற இளைஞர், யுவதிகளை இனங்கண்டு யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் ஒவ்வொரு வீடு அமைக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகிறது.

5 இலட்சம் ரூபா பெறுமதியான இவ்வீட்டுத்திட்டத்தில் இம்மன்றத்தினால் ஒரு இலட்சம் ரூபா மட்டும் வழங்கப்பட்டு மீதிப் பணம் வீட்டு உரிமையாளானால் சேர்க்கப்பட்டு கட்டப்பட்ட வீடுகளே திறந்துவைக்கப்பட்டது.

இதன்படி வேலணைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வீடு முதலாவதாகவும், ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வீடு இரண்டாவதாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ, 85)

## உணவுப் பொதி முறைகள் குறித்து முறைப்பாடுகள் முன்வைக்கலாம்

(கொழும்பு)

உணவு வகைகளைப் பொதியிடுவதற்காக தரமான உறைகள் பயன்படுத்தப்படாமை மற்றும் பாதுகாப்பற்ற உறைகளை பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் முறைப்பாடு செய்யமுடியும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இத்தகைய உணவு வகைகள் பற்றிய முறைப்பாடுகளை சுகாதார அமச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவிடம் முன்வைக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளைச் செய்வதற்கு ஏதுவாக விசேட தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சின் சுற்றாடல் மற்றும் தொழில்சார் சுகாதாரம் தொடர்பான பணிப்பாளர் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார். இதற்கமைய 011 2 368 727 என்ற இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை முன்வைக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# பேருந்துக் கட்டணத் திருத்தம் நாடாளுமன்றில் புதிய சட்டமூலம்

(கொழும்பு)

பேருந்துக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பான புதிய சட்ட மூலத்தை தற்போது ஆராய்ந்து வருவதாகவும், அமைச்சரவையில் அடுத்த வாரம் இதனை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ.ரத்னாயக்க தெரிவிக்கிறார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் பேருந்து உரிமையாளர்கள் சங்கமும் இணைந்து பேருந்துக் கட்டண அதிகரிப்பு சம்பந்தமான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஏற்கனவே கொள்கைத் திட்டமொன்றைத் தயாரித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தான்தோன்றித்தனமாக பேருந்துக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான சாத்தியம் கிடையாது எனவும் அவர் கூறியுள்ளார். இம்முறை பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட வேண்டிய விகிதாசாரம் போன்ற விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் ஒரு மாதகால அவகாசம் கோரப்பட்டிருந்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யூனியன் கல்லூரி அதிபராக இரத்தினகுமார் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் அனுமதிக்கமைய வடமாகாண கல்விப் பணிப்பாளரின் சிபார்சின் அடிப்படையில் யாழ்.யூனியன் கல்லூரி அதிபராக கந்தையா இரத்தினகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் புண்ணியசீலன் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்தே இப்பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் கிளிநொச்சி வலய பதில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியதுடன் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-I தரத்தைச் சேர்ந்தவராவார்.

# தமிழர்களுக்கான அரசியல் தீர்வு ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கும்

## சந்திரகுமார் எம்.பி. நம்பிக்கை



(கிளிநொச்சி)

எமது மக்களின் பொருளாதாரத்தையும், வாழ்வாதாரத்தையும் உயர் நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் மிகுந்த அக்கறை காட்டி வரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எம்மக்களுக்கான அரசியல் தீர்வினை வழங்கவும் அக்கறையுடன் செயற்படுவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.


கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற ஜனாதிபதியின் 66ஆவது பிறந்த தின நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்தி பிரதேச அபிவிருத்தியில் அக்கறை கொண்டு ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் புனரமைக்கப்படாத பூநகரி, சங்குபிட்டி பாலத்தை எண்நூறு கோடி ருபா செலவில் அமைத்தமை தொடக்கம் கிளிநொச்சியில் பொருளாதாரச் சந்தையை அமைத்தல் மாதிரி சந்தையை அமைத்தல் சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானத்தினை அமைத்தல், பளை மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் வைத்தியசாலைகளை அமைத்தல் வீதிகளை புனரமைத்தல் போன்ற பாரிய செயற்பாடுகளையும் அவர் ஆரம்பித்துவைத்துள்ளார்.

இந்நிலையில் எம்மக்கள் எதிர்பார்க்கின்ற நிம்மதியான, நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வையும் அதிமேதகு ஜனாதிபதி ஏற்படுத்தித் தருவார் நிச்சயமாக நடந்தேறும் என்ற நம்பிக்கை எமக்குண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல்தலுவத்த, கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட தலைவர் முருகேசு, அக்கட்சியின் கிளிநொச்சிமாவட்ட அமைப்பாளர் திருமதி கீதாஞ்சலி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆகியோரும் மதகுருமார், பிரதேச செய[illegible]லர்கள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பயணிகளுக்கு இடையூறாக விளம்பரப் பலகைக் கம்பிகள்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நெல்லியடி பஸ் நிலையத்தில் விளமபரப் பலகை ஒன்று கடந்த சனிக்கிழமை நாட்டப்பட்டுள்ளது.

இவ் விளம்பரம் பஸ் நிலையத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளபோதும் அதனைத் தாங்கி நிற்கும் கம்பிகள் பஸ் நிலையத்தில் போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கு இடைஞ்சலாக அமைவதாக மக்கள் விசனம் தெரிவித்துளளனர்.

எனினும் இது தொடர்பான மக்கள் விசனத்தைக் கருத்திற் கொண்ட பிரதேச சபைச் செயலாளர் அண்மையில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையுடன் கலந்துரையாடப்பட்டு மக்கள் விசனம் தெரிவிக்கும் பட்சத்தில் அதனைத் தாம் அகற்றுவதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையினர் உறுதியளித்துள்ளனர்.

இவ் விளம்பரப்பலகை நாட்டப்படுகின்றபோது மக்களின் இடைஞ்சலை முன்கூட்டியே கருதி அப்பகுதி இராணுவத்தினரால் இரு தடவைகள் தடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (12)

## தொடர்ச்சியான மழையினால் உப உணவுப் பயிர்கள் நாசம்

(கிளிநொச்சி)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழையினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோக உப உணவுப் பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். மேற்படி பகுதியில் மீளக் குடியமர்ந்த கிராமங்களில் இம்முறை விவசாயிகளினால் உழுந்து, பயறு, நிலக்கடலை மற்றும் மரக்கறிச் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் மழையினால் மரக்கறிச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துக் காணப்படும் இதேவேளை, பகுதியாக மேற்கொள்ளப்பட்ட உப உணவுப் பயிர்களும் அழிவடைந்துள்ளதால் விவசாயிகள் தாம் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (உ-கே)

## ஊழியர் சேமலாப நிதிக்கு கைவிரல் அடையாளம் பெறல்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தில் உள்ளடங்குகின்ற அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள தொழில் திணைக்கள அலுவலகத்திலும், சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும் இடம்பெறும்.

உடுவில் பிரதேச செயலகத்தில் டிசம்பர் 2 ஆம் திகதியும், கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் 12 ஆம் திகதியும் கைவிரல் அடையாளம் பெறும் நடவடிக்கை இடம்பெறும் என வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கணேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அங்கத்தவர்கள் கைவிரல் அடையாளம் வழங்க வரும்போது தமது தேசிய அடையாள அட்டை, தொழில் தருநரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் சமூகம் தரவேண்டும்.

இத்திட்டத்தில் இணைந்துள்ளவர்கள் தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்வதற்கு குறித்த தினங்களில் அவர்களுக்கு விசேட விடுமுறை வழங்கி ஒத்துழைக்க வேண்டும் என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (எஸ்)

## கடற்றொழில் குடும்பங்களுக்கு பார்சிக் நிறுவனம் உதவி வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

யாழ்ப்பாணக்குடா நாட்டில் மீளக்குடியமர்ந்த நான்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 18 குடும்பங்களுக்கு 43 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தும்புக் கண்ணாடியிழை, வள்ளங்கள், வெளியிணைப்பு இயந்திரங்களை பார்சிக் நிறுவனம் ஜப்பான் பிளட்வோட் நிறுவன நிதி உதவி மூலம் வழங்கவுள்ளது.

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஐந்து பயனாளிகளுக்கும், வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த மூன்று பயனாளிகளுக்கும், ஒவ்வொருவருக்கும் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான படகு இயந்திரங்களும், வடமராட்சி கிழக்கு மணற்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஐந்து பயனாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் இரண்டு இலட்சத்து 32 ஆயிரம் ரூபா பெறுமதியான படகு இயந்திரங்களும் இந்த மாத இறுதியில் வழங்கப்படவிருக்கின்றன.

பருத்தித்துறை தும்பளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஐந்து பயனாளிகளுக்குப் படகுகள், இயந்திரங்கள் கடந்த 15ஆம் திகதியன்று பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. வரதீஸ்வரன் அவர்களால் கையளிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட கடனுதவியில் ஒரு இலட்சம் ரூபா மானியமாகவும், மிகுதி சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் பார்சிக் நி[illegible]வன யாழ்ப்பாண மாவட்ட [illegible] இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (70)

## குப்பைகளை அகற்றுவதற்கு கரவெட்டிப் பிரதேச சபை ஏற்பாடு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபைக் குட்பட்ட கிராமங்களின் சன சமூக நிலையங்களின் பகுதிகளில் குப்பைகளைக் கொட்டுவதற்கு ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு கிழமையும் பிரதேச சபையினூடாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குப்பைகளை அகற்றுவது தொடர்பாக சனசமூக நிலையங்களினால் விவாதிக்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, கரவெட்டி பிரதேச சபைத் தலைவரின் பணிப்பின் பேரில் 330 தெரு மின் விளக்குகள் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இமையாணன் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த தலைவர், செயலாளர்கள் இமையாணன் பகுதியில் மின்சாரம் இல்லாமல் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பிரதேச சபைத் தலைவர் மின் விநியோக நடவடிக்கைகள் மின்சார சபையினாலேயே முன்னெடுக்கப்படும் எனச் சுட்டிக்காட்டியதுடன் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மயானங்களைச் சீர்செய்ய வேண்டியுள்ளது. இதற்கு அவ்வவ் கிராமங்களில் உள்ள சன சமூக நிலையங்கள் மயானத்திற்கான நிர்வாகத்தைத் தெரிவு செய்து அதனூடாக மயானங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். (உ-18)


## குருகுல மண்டபம் திறப்பு விழா

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தினால் குருகுல மண்டபம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா வெளிவட்ட வீதியில் திறந்து வைக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தின் அந்தணர் ஒன்றியத் தலைவர் முத்து ஜெயந்திநாதக் குருக்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தர்ம சாஸ்தா குருகுலத்தின் அதிபர் தா. மகாதேவக்குருக்கள் மற்றும் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் போசகர் க. சந்தசாமி குருக்கள், ஒன்றியத்தின் செயலாளர் சு. கிருஸ்ணகுமாரக்குருக்கள் மதப்பெரியவர்களும் கலந்து கொண்டனர். (125)





வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர் சமூக சேவைகள் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சங்கத்தால் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிகழ்வில், புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் க. ஆனந்தகுமாரிடம் சங்கத்தின் தலைவர் வே. அருந்தவராசா நூல்களை கையளிப்பதையும், பிரதேச சபை உத்தியோகத்தர்களுடன் சங்கத்தின் பிரதிநிதிகள் நிற்பதையும் காணலாம்.



யாழ். பிரதேச செயலகத்தின் கலாசார விழா அண்மையில் யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்ற போது கலை இலக்கிய சமூக சேவைக்கான சான்றிதழை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் எம்.எல். லாபிர்க்கு வழங்குவதைக் காணலாம். (10)

# மழையினால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை நிறைவேற்றப்பணிப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பகுதியில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நாவற்குழி மேற்கு அம்பன் குடியிருப்புப் பகுதியில் தற்போது பெய்து வரும் பருவகால மழையினால் மக்கள் பல்வேறு பட்ட அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். இதனை அறிந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நேற்று முன்தினம்விசேட விஜயத்தை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட பிரதேசத்தை பார்வையிட்டதுடன் பிரதேச மக்களுடன் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார்.

இதன்போது இப்பிரதேச மக்களுக்கான உணவு, குடிநீர், மலசலகூடம் உள்ளிட்ட அவசிய அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றுமாறும் விரைவில் இப்பிரதேச மக்களுக்கான காணி விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.



இதன் போது வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் அஞ்சலி தேவி ஈ.பி.டி.பியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் சார்ள்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மீள்குடியமர்ந்த 100 குடும்பங்களுக்கு கடற்தொழில் உபகரணங்கள் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீளக்கடியமர்ந்துள்ள மூன்று கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு பாசிக் நிறுவனம் சுவிஷ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பின் நிதி அனுசரணையுடன் 90இலட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை வழங்கவிருக்கிறது.

மக்கள் மீளக்குடியமர்ந்த கட்டைக்காடு வெற்றிலைக்கேணி வத்திராயன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களில் ஒவ்வொருவருக்கும் தலா 90 ஆயிரம் பெறுமதியான கட்டுமரம், வலைகள் 40 குடும்பங்களுக்கும் தலா 90 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் மிகுதி 60 குடும்பங்களுக்கும் வழங்கப்படவிருக்கின்றன.

இவ்வுதவி வழங்கலில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் அங்கத்தவர் தொகை கூடிய குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் இவர்களுக்கு முகாமைத்துவம் சம்பந்தமான அடிப்படைப்பயிற்சியும், நவீன முறையில் கருவாடு பதனிடுவதற்கான பயிற்சியும் வழங்கப்படவிருப்பதாக பாசிக் நிறுவனத்தின் யாழ்ப்பாண மாவட்ட திட்ட இணைப்பாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார். (70)

# பெறுபேற்றை உயர்த்தும் விசேட கல்விச் செயற்பாடு

(அச்சுவேலி)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினூடாக GIZ/ESC நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட சிபார்சிற்கமைய யாழ். கல்வி வலயத்தில் உள்ள பின்தங்கிய 05 பாடசாலைகளில் விசேட கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணுவித்தியாலம், கோப்பாய் மகாவித்தியாலயம், நாவாந்துறை றோ.க.த.க.பா ஊரெழு கணேஷா வித்தியாலயம் ஆகிய படசாலைகளில் க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறுபேற்றை உயர்த்தும் வகையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய 3 பாடங்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் வளவாளர்களினால் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (03)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(21.11.2011–திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 05 ஆம் நாள்.
இராகுகாலம் 7.40-9.10, சுபநேரம் 12.10 -1.40வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.ப . 10.26 வரை
திதி: ஏகாதசி மு.இ. 9.41 வரை
ஏகாதசி விரதம்

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணக்கஷ்டம், நண்பர்களால் உதவி, வீண் கற்பனை, சகோதர நன்மை, உடம்பு பலவீனம்.

ரிஷபம:–குடும்பத்தில் கவலை, பணம் வரும், தொழில் முடக்கம், வீண் பேச்சு, தவறான முடிவு.

மிதுனம் :–காசுக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, வீண் வாக்குவாதம், அயலார் தொந்தரவு, உடம்பு பலவீனம்.

கடகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசுவரும், நண்பர்களால் நன்மை, சுப காரியப் பேச்சு, உடம்பு பலவீனம்.

சிம்மம்:– காசுக்கஷ்டம், குடும்பத்தில் அமைதி, வீணான கோபம், அதிகாரப் போட்டி, உடற்பலவீனம்.

கன்னி :– காசுவரும், குடும்பத்தில் நன்மை, ஆனந்தமான உரையாடல், வீண் பேச்சு, உடம்பு பலவீனம்

துலாம் :–குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், தொழில் மந்தம், சுபகாரியச் செலவு, வீண் பேச்சு.

விருச்சிகம்–காசு கிடைக்கும் குடும்பத்தில் அமைதி, வீண் குதர்க்கம், சகோதரபாசம், உடம்பு பலவீனம்.

தனுசு:– குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், வீண் சபல சிந்தனை, அர்த்தமற்ற முடிவு.

மகரம:– காசுவரும், குடும்பத்தில் கவலை, தொழில் விருத்தி, உடம்பு நற்சுகம், விபத்து வரலாம்.

கும்பம் :– குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், அதிகாரப்போட்டி, சகோதர நன்மை.

மீனம் :– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, இனசன அழைப்பு, தானதர்ம சிந்தனை, உடற்சுகம்.

# விண்ணப்பம் கோரல்

(அரியாலை)

யாழ்ப்பாணம் குருநகரில் இயங்கும் உயர் தேசிய தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு அடுத்த ஆண்டுக்கான மாணவர்கள் அனுமதிக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முழுநேர மற்றும் பகுதிநேரக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் இந்த மாதம் 25 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

HNDA , HNDBM, HNDIE போன்ற துறைகளுடன் இவ்வாண்டு புதியதாக HNDIT என்ற உயர் தேசிய தகவல் தொழில் நுட்ப பாடநெறியும் மற்றும் உல்லாசப் பயண முகாமைத்துவநெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பணிப்பாளர் எஸ்.விஜயநாதன் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 2222595 என்னும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

# இராமநாதபுரம் கிராமத்தில் 4ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் பகுதியில் இம்முறை 4 ஆயிரத்து 58ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை இம்முறை கூடுதலான நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான உரவிநியோகம் கட்டம், கட்டமாக வழங்கப்பட்டுவருகிறது.

இதில் முதலாம்கட்டமான உரவிநியோகம் வழங்கப்பட்டு பூர்த்தியடைந்துள்ள நிலையில் 2 ஆம் கட்ட உரவிநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக கிளிநொச்சி கமநலசேவை திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-கே)



## பரமர் சங்கமம்

நான் அவன் இல்லை என்ற பெயரில் சினிமாப் படமொன்று நாலைந்து வருடங்களுக்கு முன்பாக வெளிவந்தது.

அதேபெயரில் நாற்பது வருடங்களுக்கு முன்பாகவும் படம் தயாரிக்கப்பட்டது. அந்தப்படத்தை தயாரித்ததுடன், முக்கிய வேடம் ஏற்று நடித்திருந்தார் அந்தக் காலத்தில் காதல் மன்னன் என்ற புகழ் பூத்த நடிகர் ஜெமினி கனேசன்.

இரண்டு படங்களும் கிட்டத்தட்ட ஒரே கதையம் சத்தைக் கொண்டதுதான், அதுக்கும், இதுக்கும் சில மாற்றங்கள் இருந்திருக்கலாம்.

அந்தப் படத்தை பெருமுயற்சிஎடுத்து நடித்திருந்ததாகவும், எதிர் பார்த்தளவு வெற்றியைப் பெறவில்லை எண்டும் ஜெமினிகணேசன் மனம் வருந்திக் கூறிய செவ்வியைச் சமீபத்தில் வாசிக்கக் கிடைத்தது.

அதில் ஐந்து பெண்களை வெவ்வேறு மாநிலம், மதம், மொழி மாறுபட ஒரு இளைஞன் மணம் முடிக்காதவன் போல நடித்து திருமணம் செய்வதாகச் சித்தரிக்கப் படுகிறது.

அது எதார்த்தத்து நடைமுறையில் நிகழ கடினமான ஒன்று. அதேவேளை இரண்டு மூன்று திருமணங்களை முடித்துக்கொண்டவர்கள் அங்கங்கே இருப்பதையும் அறிகிறோம்.

திரைப்படம் சித்தரிப்பதுபோல் திட்டமிட்டு நடத்தப் படுபவையாக அவை அமைவதில்லை. முரண்பாடுகள் காரணமாகப் பிரிந்து சென்றவர்கள், வெவ்வேறு திருமணங்களைச் செய்து கொண்டு சிறப்பாக வாழ்ந்து வருவதையும் குறிப்பிடலாம்.

இப்பொழுது புலம்பெயர்ந்து வாழ்கின்றவர்கள் அநேகர் அந்தந்த நாடுகளில் வெள்ளைக்கார பெண்களையோ, புலம்பெயர்ந்த வெவ்வேறு நாட்டுப்பெண்களைத் திருமணம் செய்து கொண்டு பிள்ளை குட்டிகள் இருக்கத் தக்கதாக இங்கேயும் வந்து ஒரு பெண்ணின் வாழ்வை சீரழிக்கின்ற சம்பவங்களும் நடைபெற்றுள்ளது.

அத்தகைய சம்பவங்களை இலக்கியக் காரர்கள் பரவலாக சிறுகதை, நாவல்கள் விவரணங்களில் எழுதியுள்ளனர். என்றாலும் அந்தக்கதைகள் நின்று விடாமல் தொடர்வதாகவே காண்கிறோம்.

அந்தக் காலத்தில் திருணம் என்பது தமிழர்களைப் பொறுத்தவரை என்றில்லாமல் மனித சமுதாயத்திற்கே ஆயிரம் காலத்துப் பயிராகவே கணிக்கப்பட்டு பேணப்பட்டும் வந்தது.

மில்லேனியம் என்னும் இருபதாம் நூற்றாண்டை நெருங்க, நெருங்க மனித சமுதாய நாகரீகங்கள் மாறுபட்ட வாழ்வியல் விழுமியங்கள் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருப்பதையே காண்கிறோம்.

இதனால் உலக சனத்தொகை 700, கோடியில் இருந்து 1000, கோடியாக உருவெடுக்கலாம். அதுபோல் கோடு, கச்சேரி, பொலிஸ் நிலையங்களில் பதிவாகும் வழக்குகளும் பல கோடி மில்லியனாக உயருமல்லவா?

ஆணோ, பெண்ணோ வாழ்க்கையை வியாபாரமாகக் கருதலாமா? சமீபத்தில் யாழ்.நகரில் விடுதிகளில் விபச்சாரத்தில் ஈடுபடுவதும், மாணவர்கள் போதை வஸ்துப் பாவனையும் அம்பலத்துக்கு வந்திருப்பதானது?

எமது யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் மும்பாய் போன்ற சிவப்பு விளக்குப் பகுதிகளாக பரிணமிக்கும் பெருமையைச் சம்பாதிப்பதுக்காகவா?

# ஜோர்ஸ் வெப்ஸ்ரர் கிண்ணம் தரப்படுத்தலில் புதிய விதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சிறந்த அணிகளைத் தெரிவு செய்வதற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்கான அணிகளைத் தர நிலைப்படுத்தல் முறையில் சில மாற்றங்களை அடுத்த வருடம் முதல் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சிறந்த அணித் தெரிவினை கடந்த இரண்டு வருடங்களாக நடத்தி வருகின்றோம். இந்நிகழ்வில் வெற்றிபெறும் அணிக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்பட்டு வந்துள்ளது. அணிகள் பெறும் பெறுபேறுகளுக்கு (ஓட்டங்கள், விட்கெட் இழப்புக்கள்) புள்ளிகள் வழங்கப்பட்டால் சில அணிகள் நன்மை அடையக்கூடிய சர்ந்தர்ப்பம் உருவாகும். அந்த அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.


இதன்படி ஒரு ஓட்டத்திற்கு 0.1 புள்ளியும், ஒரு விக்கெட்டுக்கு 0.1 புள்ளியும் வழங்கப்படவுள்ளது.

200 ஓட்டங்களால் அணி ஒன்று வெற்றிபெறுமானால் மேலதிகமாக ஒரு புள்ளியும், 10 விக்கெட்டுக்களால் ஒரு அணி வெற்றிபெறும் பட்சத்தில் மேலதிகமாக ஒரு புள்ளியும் வழங்கப்படவுள்ளது.

மேற்கூறப்பட்ட புள்ளிகள் வழங்கப்படுவதன் மூலம் இந்நிகழ்வு மேலும் பல வழிகளில் அபிவிருத்தி அடைவதற்கும், சில அணிகள் சிறப்பாகச் செயற்பட்டும் சில நேரங்களில் தோல்வியடைந்தாலும் அவர்கள் பெறும் பெறுபேறுகளுக்குப் புள்ளிகள் வழங்குவதன் மூலம் நன்மை அடையக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

இந்த நடைமுறைகளின் மூலம் சிறந்த அணிகளையும், சிறந்த வீரர்களையும் அடையாளம் காணக்கூடியதாக இருக்கும் அதேவேளை, யாழ். மாவட்டத்தில் சிறந்ததொரு அணி உருவாக வழிவகுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

# தேசிய கராத்தேயில் வெண்கலப் பதக்கம்



(கொழும்பு)

தேசிய மட்ட கராத்தேப் போட்டியில் இரு பிரிவுகளில் எம். இரட்ணசோதி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தேசிய மட்டக் கராத்தேப் போட்டி கொழும்பு சுகதாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதில் 50 வயதிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் வடமராட்சியைச் சேர்ந்த எம். இரட்ணசோதி பங்கேற்றார்.

சண்டை மற்றும் காட்டாப் போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்ட இவர் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

62 வயதுடைய இவர் இலங்கை கராத்தே சம்மேளனத்தின் கறுப்புப் பட்டி - 6 பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லை வலயமும் பதக்கம் வென்றது

(முல்லைத்தீவு)

ஆசிரியர்களுக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு 12 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நுவரெலியா பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்தும் வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர்.

இதில் செல்வி சி.பி. மேரி மெற்றில்டா (முல்லை. வற்றாப்பளை) தட்டு எறிதல் போட்டியில் தங்கம், குண்டு எறிதல் போட்டியில் தங்கம், ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளி, 4X100 அஞ்சல் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

வி. மயூரி (முல்லைத்தீவு தேவிபுரம் அ.த.க. பாடசாலை) தட்டு எறிதல் போட்டியில் தங்கம், குண்டு எறிதல் போட்டியில் தங்கம், ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளி, 4X100 அஞ்சலோட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.

பி. பாலசேந்தன் (முல்லைத்தீவு வள்ளிபுனம் வித்தியாலயம்) 100 மீற்றர் போட்டியில் தங்கம், 200 மீற்றர் போட்டியில் வெள்ளி,4X100 அஞ்சலோட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.

எஸ். மோகனதாஸ் (முல்லைத்தீவு ம.வி.) 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலம், 4X400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கங்களை வென்றார்.

எஸ். முத்துக்குமார் (குமுழமுனை ம.வி.) 4X100 அஞ்சலோட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு ஆறு தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்று சாதனை படைத்த மேற்படி வீர, வீராங்கனைகளுக்கு முல்லைத்தீவு கல்வி வலய அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலர் வாழ்த்துக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தர்மபுரம் மகாவித்தியை வென்றது சென் ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

தர்மபுரம் மகா வித்தியாலய அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 57 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை தருமபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறறது.

சென் ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியும் தருமபுரம் ம.வி. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தருமபுரம் மகா வித்தியாலய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய தருமபுரம் மகா வித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்க எண்ணிக்கையைப் பெறவில்லை. பந்து வீச்சில் பனோ அப்டயன் மூன்று, துளசிகன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் சிந்துஜன் 15 ஓட்டங்களைப் பெற்றார்.

99 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய தருமபுரம் மகா வித்தியாலய அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் தோல்வியைத் தழுவியது. இரண்டாவது இனிங்ஸிலும் துடுப்பாட்ட வீரர்கள் எவரும் நிலைத்து நின்று ஆடவில்லை. பந்து வீச்சில் பனோ அப்டயன் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 57 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதேவேளை, தருமபுரம் மகா வித்தியாலய அணி தற்போதே கடினப் பந்துப் போட்டிகளில் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட மட்ட கூடைப்பந்து வருட இறுதியில் நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆண், பெண் என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்த மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடருக்கு யாழ். மாவட்ட அணிகளை யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் நடத்தப்படவுள்ள இத்தொடருக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (93)

# கால்பந்து போட்டி

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் அணிக்கும் யாழ். கால்பந்தாட்ட மத்தியஸ்தர் அணிகளுக்கும் இடையிலான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி நாளை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வருடா வருடம் நடத்தப்படும் இப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

இருப்பினும் கடும் மழை காரணமாக இப்போட்டி குறித்த தினத்தில் நடைபெறவில்லை.

இந்நிலையில் நாளைய தினம் மாலை 3.30 மணிக்கு போட்டி நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.





அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் சார்பாக பங்குகொண்டு வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பல்கலைக்கழக கராத்தே பயிற்றுவிப்பாளர் எஸ். ரஞ்சித்குமாருக்கு துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் விருது வழங்குவதையும், கரப்பந்து, மெய்வல்லுநர் அஞ்சலோட்டப் போட்டிகளில் சாதனை புரிந்த கே. ஐங்கரன், எஸ். கோபி, இ. ஜெயரூபன், தி. டிரோன் ஆகியோர் விருதுடன் நிற்பதையும் காணலாம். (படப்பிடிப்பு: பா. சிகான்)


# ஜனவரியில் நிச்சயதார்த்தம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீரரான ஹர்பஜன்சிங் நடிகை கீதா பஸ்ராவை காதலித்து வருகிறார். இது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் இந்தக் காதல் விடயத்தை பேசுவதை ஹர்பஜன்சிங் எப்போதுமே தவிர்த்து வந்தார்.

இந்த நிலையில் ஹர்பஜன்சிங்- கீதா பஸ்ராவின் திருமண நிச்சயதார்த்தம் ஜனவரி மாதம் நடைபெறுவதாக தகவல் வெளியாகி உள்ளது. பஸ்ராவின் உறவினர்கள் பெரும்பாலோனோர் லண்டனில் இருப்பதால் திருமண நிச்சயதார்த்தம் அங்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# மரடோனாவின் தாய் மரணம்




கால்பந்தாட்ட ஜாம்பவான் டீகோ மரடோனாவின் தாயார் டோனா டோட்டோ நேற்று முன்தினம் பியூனஸ் அயர்சில் 81ஆவது வயதில் மரணம் அடைந்தார்.

ஆர்ஜென்ரீனா அணியின் முன்னாள் பயிற்சியாளர் மரடோனா தற்போது டுபாயைச் சேர்ந்த அல்வாஸ்ல் அணிக்கு பயிற்சியாளராக உள்ளார். இவரது தாயார் டால்மா என்ற டோனா டோட்டோ பியூனஸ் அயர்சில் வசித்து வந்தார். அவருக்கு இதய நோய் இருந்து வந்தது. கடந்த வெள்ளிக்கிழமை அவருக்கு நோயின் தீவிரம் அதிகரித்தது. இதையடுத்து பியூனஸ் அயர்சில் உள்ள லாஸ ஆர்காஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தாயாரின் உடல்நிலை குறித்து டுபாயில் இருந்த மரடோனாவுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவரும் உடனடியாக பியூனஸ் அயர்ஸ் திரும்பி தாயாரை அருகில் இருந்து பார்த்துக் கொண்டார். ஆனால் சிகிச்சை பலன் அளிக்காமல் மரடோனாவின் தாயார் நேற்று மரணம் அடைந்தார்.

# கம்ப்ளியின் கூற்றுக் குறித்து விசாரணை நடத்த வேண்டும்



(கராச்சி)

கம்ப்ளி தெரிவித்து சூதாட்டக் குற்றச்சாட்டுக் குறித்து இந்திய கிரிக்கெட் சபை விசாரணை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர்கள் லத்தீப், மொய்ன் கான் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ரஷீட் லத்தீப்: இந்திய அணியின் முன்னாள் வீரர் ஒருவர் கூறிய சூதாட்ட குற்றச்சாட்டை ஐ.சி.சி. தலைவர் சரத்பவார் நிராகரித்து இருப்பது கண்டனத்துக்கு உரியது. 15 ஆண்டுகளுக்கு பின்னர் கூறப்பட்ட குற்றச்சாட்டாக இருந்தாலும் விசாரணை நடத்த வேண்டும்.

இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் வாரியமோ அல்லது சரத்பவாரோ ஏன் பயப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. கம்ப்ளின் சூதாட்ட புகார் குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

மொய்ன்கான்: கம்ப்ளி கூறிய சூதாட்ட புகாரை ஒதுக்கி தள்ளிவிட முடியாது. இது தொடர்பாக ஐ.சி.சி. இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்த கருத்து ஆச்சரியம் அளிக்கிறது. இந்திய கிரிக்கெட் சபை விசாரணை நடத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இதேபோல பாகிஸ்தான் முன்னாள் வீரர்கள் இக்பால் காசிம், ச ஃப்ராஸ் நவாஸ் ஆகியோருக்கும் விசாரணைக்கு உத்தரவிடாமல் இருப்பதற்கு கண்டனம் தெரிவித்து உள்ளார்.

# முன்னாள் வீரர்கள் கம்ப்ளி மீது பாய்ச்சல்

(புதுடில்லி)

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின் போது சூதாட்டம் நடந்ததாக கம்ப்ளின் வெளியிட்ட குற்றச்சாட்டு குறித்து இந்திய அணியின் முன்னாள் வீரர்களான சஞ்சேய் மஞ்சுரேக்கர், நயன் மோங்கியா, வெங்கடபதி ராஜு மற்றும் மேலாளர் அஜீத் வடேகர் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.


சஞ்சேய் மஞ்ச்ரேக்கர்: 1996 உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் அரையிறுதியில் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. தவறான முடிவு தான். ஆனால் இந்த முடிவை எல்லோரும் இணைந்து தான் எடுத்தோம். இது நேர்மையான முடிவு தான்.

வெங்கடபதி ராஜு: அந்தப்போட்டியில் சூதாட்டம் நடந்து இருப்பதாக நான் கருதவில்லை. கம்ப்ளி தற்போது பொய்யான குற்றச்சாட்டை கூறியுள்ளார். களத்தடுப்பைத் தேர்வு செய்தது ஒட்டு மொத்த முடிவாகும்.

மோங்கியா: இந்திய கிரிக்கெட்டில் தேவையில்லாத மோசமான சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார். இந்திய அணியின் தோல்விக்கு காரணம் எதுவும் இல்லை. வீரர்கள் சிறப்பாக ஆடாததே தோல்வியாக அமைந்தது.

அஜீத் வடேகர்: (அப்போதைய மானேஜர், இந்திய அணி முன்னாள் கப்டன்): ஆடுகளத்தை தவறாக கணித்து விட்டோம். களத்தடுப்பு முடிவு ஒட்டு மொத்தமானது. காலிறுதியில் நாங்கள் பாகிஸ்தானைத் தோற்கடித்து இருந்ததால் அதிக நம்பிக்கையில் இருந்தோம். கம்ப்ளி இந்த புகாரை இப்போது கூறி இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. 15 ஆண்டுகளுக்கு பிறகு அவர் திடீரென இந்த சூதாட்ட குற்றச்சாட்டை கூறுவது ஏன்?

முன்னாள் கப்டன் கங்குலியும் கம்ப்ளியின் குற்றச்சாட்டு முட்டாள் தனமானது என்று கூறியுள்ளார். அதே நேரத்தில் அசாருதீன் தனது நிலையை தெளிவுப்படுத்திவிட வேண்டும் என்று கூறியுள்ளார்.




உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணிக் கப்டன் டோனி பயன்படுத்திய துடுப்பு இந்திய நாணயப் படி 71 இலட்சத்திற்கு ஏலம் போனது. மும்பையில் ரசிகர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டபோது முன்னாள் கப்டன் கபில்தேவ் மற்றும் சுரேஷ் ரெய்னா கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# விசாரணை நடத்த உத்தரவு



(புதுடெல்லி)

அசாருதீன் மீது கம்ப்ளி சுமத்திய சூதாட்ட குற்றச்சாட்டு பூதாகரமாக வெடித்துள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபை விசாரணை நடத்த வேண்டுமென மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மாகென தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மாகென் நேற்று முன்தினம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் எந்த ஒரு பிரச்சினையிலும், வீரர் ஒருவர் குற்றம் சாட்டினால் அதைக் கட்டாயம் விசாரித்து உண்மையை வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும். உண்மை என்ன என்பதை அறிய பொது மக்களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு. அதனால், இந்திய கிரிக்கெட் சபை இப்பிரச்சினை குறித்து உரிய விசாரணை நடத்தி உண்மை என்ன என்பதை தெளிவு படுத்த வேண்டும். அதை செய்யத் தவறினால், விளையாட்டுத்துறை இப்பிரச்சினையை விசாரிக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 5 மாதத் தடை



மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் அணியின் வீராங்கனை டிரிமய்ன் ஸ்மார்ட். பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த செப்டெம்பர் மாதம் நடந்த 20 ஓவர் போட்டியில் இவர் போதை மருந்து பயன்படுத்தியது தெரிய வந்தது.

டிரிமய்னின் சிறுநீர் மாதிரிப் பரிசோதனை செய்யப்பட்டத்தில் அவர் போதை மருந்து உட்கொண்டது கண்டு பிடிக்கப்பட்டது. இது ஐ.சி.சி.யின் போதை தடுப்பு விதிகளுக்கு எதிரான தாகும்.

இதைத் தொடர்ந்து அவரை 5 மாதம விளையாடுவதற்கு ஐ.சி.சி. தடை விதித்து உள்ளது. 26 வயதான டிரிமய்ன் 15 ஒருநாள் போட்டி, 12 இருபது ஓவர் போட்டிகளில் விளையாடி உள்ளார்.

# ஆண்டின் கடைசி ரென்னிஸ் லண்டனில் நேற்று ஆரம்பம்

(லண்டன்)

முன்னணி ரென்னிஸ் வீரர்கள் பங்கேற்கும் உலக இறுதி சுற்று ரென்னிஸ் போட்டி லண்டனில் நேற்று ஆரம்பமானது. ஆண்டுதோறும் இறுதியில் உலகத் தர வரிசையில் முதல் எட்டு இடங்களைப் பிடித்துள்ள வீரர்கள் மட்டும் பங்கேற்கும் ஏ.டி.பி. உலக இறுதிச் சுற்று என்று அழைக்கப்படும் ஆண்கள் உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான ஆண்கள் உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

இதன் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் பங்கேற்கும் வீரர்கள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். ஒற்றையருக்கான "ஏ" பிரிவில் முதல் நிலை வீரர் ஜோகோவிச் (சேர்பியா), 3ஆம் நிலை வீரர் ஆண்டி முர்ரே (இங்கிலாந்து), 5ஆம் நிலை வீரர் டேவிட் பெரர் (ஸ்பெயின்), 7ஆம் நிலை வீரர் தோமஸ் பெட்ரிச் (செக் குடியரசு) ஆகியோரும், "பி" பிரிவில் 2ஆம் நிலை வீரர் ரபெல் நடால் (ஸ்பெயின்), 4ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), 6ஆம் நிலை வீரர் ஜோவில்பிரட் சோங்கா (பிரான்ஸ்), 8ஆம் நிலை வீரர் மார்ட் பிஷ் (அமெரிக்கா) ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

இரட்டையருக்கான "ஏ" பிரிவில் பொப்-மைக் பிரையன் (அமெரிக்கா), லியாண்டர் பெயஸ்-மகேஷ் பூபதி (இந்தியா), ரூபர்ட் லின்ட்செட் (சுவீடன்)-ஹோரியா டிகாவ் (ருமேனியா), ஜூர்ஜென் மெல்சர் (ஆஸ்திரியா)-பிலிப் பெட்ஸ்னெர் (ஜெர்மனி) ஆகியோரும், "பி" பிரிவில் மைக்கல் லோத்ரா (பிரான்ஸ்)-நினாட் சிமோன்ஜிச் (செர்பியா), டேனியல் நெஸ்டர் (கனடா)-மாஸ் மிர்னி (பெலாரஸ்), ரோகன் போபண்ணா (இந்தியா)-அய்சம் அல்-குரேஷி (பாகிஸ்தான்), மாரிஸ் ஸ்பைடென்பெர்க்-மார்சின் மாட்கோஸ்கி (போலந்து) ஆகியோரும் இடம் பிடித்து உள்ளனர்.

# மும்பையில் 100ஆவது சதம் 100 தங்க நாணயங்கள் பரிசு

(மும்பை)

சொந்த மண்ணில் நாளை ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சச்சின் தனது 100ஆவது சதம் சாதனையை நிகழ்த்தினால், 100 தங்க நாணயங்களை பரிசாக வழங்குவதாக மும்பை கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

கொல்கத்தாவில் நடந்த மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் சச்சின் சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்காக பெங்கால் கிரிக்கெட் சங்கம், சச்சின் தங்கள் ஊரில் சதம் அடித்தால் 100 தங்க நாணயம் பரிசு தருவதாக அறிவித்தது. ஆனால் சச்சின் ஏமாற்றிவிட்டார். இதையடுத்து, 3ஆவது டெஸ்ட் நாளை மும்பையில் நடக்க உள்ளது. இது சச்சினின் சொந்த ஊர். சொந்த மண்ணில் சச்சின் அடிப்பார் என உள்ளூர் ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்திருக்கிறார்கள். இங்கு சதம் அடித்தால் சச்சினுக்கு 100 தங்க நாணயம் வழங்குவதாக மும்பை கிரிக்கெட் சங்கமும் அறிவித்துள்ளது. மும்பை ரசிகர்களை சச்சின் ஏமாற்ற மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இங்கிலாந்து முன்னாள் வீரர் மரணம்

(லண்டன்)

இங்கிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரர் பாசில் டி ஒலிவைரா நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

தென்னாபிரிக்காவில் இருந்து இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்து அந்த நாட்டு கிரிக்கெட் அணியில் சகலதுறை வீரராக இடம் பிடித்து விளையாடிய முன்னாள் வீரர் பாசில் டி ஒலிவைரா 44 டெஸ்டில் விளையாடி 2484 ரன் எடுத்ததுடன் 47 விக்கெட்டும் வீழ்த்தினார். இவரை தென்னாபிரிக்காவுக்குள் நுழைய அந்த நாட்டு அரசு தடை விதித்ததால் தென்னாபிரிக்கா கிரிக்கெட்டில் தனிமைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. 80 வயதான பாசில் டி ஒலிவைரா இங்கிலாந்தில் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார்.

# முறையற்ற பொருளாதாரத்தை எதிர்த்து ஜே.வி.பி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

## அனுராதபுரத்தில் வியாழன் ஆரம்பம்



(கொழும்பு)

அரசாங்கம் முன்னெடுத்து வரும் முறையற்ற பொருளாதார வேலைத திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியாக நகரங்கள் தோறும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக ஜே.வி.பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக பாரிய அசௌகரியத்திற்கு முகம் கொடுத்துள்ளனர். எதிர்கால நோக்கின்றி அரசாங்கம் செயற்படுகிறது. விவசாயிகளுக்கு தமது உற்பத்திகளுக்கு நியாய மான விலைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வழிமுறைகள் இல்லை.

தொழில் வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு முறையான தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு முறையான வேதனவுயர்வுகள் மற்றும் நிலையான கொடுபபனவுகள் வழங்கப்பட வேண்டும் என்று அநுர குமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் போராட்டம் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி முதல் ஆர்ப்பாட்ட நடவடிக்கை அநுராதபுர நகரில் வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று உள்ளூராட்சித் தேர்தல் - டிசம்பர் 31 இல்

(கொழும்பு)




முல்லைத்தீவின் இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிககப்பட்டுள்ளது. எனினும் கண்ணிவெடிய கற்றல் மற்றும் மீள்குடியமர்வை பொறுத்த அந்த சபைகளுக்கான தேர்தல் திகதி திட்ட்வட்டமாக அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதுகுடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளின் தேர்தல்களே நடத்தப்படவேண்டியுள்ளன. இந்தநிலையில் இந்த சபைகளுக்கான தேர்தல் திகதியை தற்காலிகமாக டிசம்பர் 31 என்று தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. முல்லைத்தீவில் 44.637 பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

7500 பேர் இன்னும் வவுனியாவில் உள்ள இடைத்தங்கல் முகாம்களான கதிர்காமர் மற்றும் ஆனந்தகுமாரசுவாமி ஆகிய கிராமங்களில் தங்கியுள்ள நிலையில் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடுகதி வீதியில் கலாசார நிகழ்வுகள்



(கொழும்பு)

மக்களிடம் எதிர்வரும் 27ஆம் திக்தி கையளிக்கப்படவுள்ள தெற்கு கடுகதி பெருந்தெருவில், பொது மக்களின் பங்களிப்புடன் கலாசார மற்றும் மத நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இடம்பெறும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவி ஏற்பு மற்றும் அவரது பிறந்த தினத்தை முன்னிட்டே இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் வான வேடிக்கைகளும் இடம்பெறுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# சகலருக்கும் மொழியறிவு தேசியத் திட்டம் அமுல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்த தினம் மற்றும் இரண்டாவது பதவியேற்பின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் மக்களுக்கு சிங்களம் மற்றும் தமிழ் மொழி அறிவினை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

2014 ஆம் ஆண்டிலே அனைத்து இலங்கையர்களுக்கும் மொழி அறிவினைப் பெற்றுக் கொடுக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு இருமொழி அறிவினை பெற்றுக் கொடுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவின் எண்ணக்கருவின் பிரகாரம் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் வழிகாட்டலின் கீழ் சிங்கள இனத்தவர்களுக்கு தமிழ் மொழி தமிழ் இனத்தவர்களுக்கு சிங்கள மொழி என்பன பற்றிய அறிவினை நாடளாவிய ரீதியில் பெற்றுக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள மொழி சங்கங்கள் ஊடாக இந்த வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்கள் இளைஞர்கள் முதியோர்கள் என்ற ரீதியில் வகுப்புகள் இடம்பெற உள்ளதுடன் அதற்குத் தேவையான ஆசிரியர்கள் மற்றும் புத்தகங்கள் என்பன தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் இலவசமாக வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உயர்தரப் பரீட்சையில் கொரிய மொழிப் பாடம்

(கொழும்பு)

கொரியாவிற்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுச் செல்ல முனையும் இளைஞர்களின் நலனை கருத்திற் கொண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கொரிய மொழியையும் ஒரு பாடமாக உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவாதன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஆங்கிலம், சீன, ஜேமன், பிரெஞ் மற்றும் ஹந்[illegible] மொழிகள் உயர்தர பாடத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


## சிகிச்சையளிக்க அதிரடிப்படைக் குழு

(கொழும்பு)

அதிவேக வீதியில் ஏற்படக் கூடிய திடீர் விபத்துக்களின் போது காயமடைந்தோருக்கு சிகிசசையளிப்பது தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் குழுவொன்றுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 24 பேர் அடங்கிய குறித்த குழுவினருக்கு இரண்டு மாதப் பயிறசி வழங்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது.

அதிவேக வீதியில் இட[illegible] பெறும் வாகன விபத்துக்களின் போது காயமடைந்த ஒருவருககு சிகிச்சை வழங்குவதே இவரகளது கடமையாகும் நோயாளர்களை பாதுகாப்பாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வது தொடர்பாகவும் குறித்த பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குழுவுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவிககிறது.

# இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலய சித்திரத் தேர் தீ வைத்து அழிப்பு



இலண்டன் ரூட்டிங் பகுதியில் சிவயோகம் அறக்கட்டளையின் கீழ் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயிலின் சித்திரத்தேர் கடந்த 16 ஆம் திகதி இரவு 11 மணியளவில் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளது. இரவு 9 மணிக்கு அர்த்தசாமப் பூசை முடிவுற்று திருக்கோயில் சாத்தப்பட்டது. இரவு 11 மணியளவில் நான்கு பேர் கொண்ட குழு ஒன்று எரிபொருட்கள் (எரிதிரவம்) சகிதம் வந்து, கடந்த 11 வருடங்களாக அம்பாள் திரு வீதி உலாவந்த, சித்திரத் தேரைத தீவைத்து அழித்துள்ளனர்.

இச்சம்பவத்தைக் கண்ட அயலில் உள்ளவர்கள் வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் தீயணைபபுப்படையினரும் செயற்பட்டு தீயை ஏனைய கட்டிடங்களுக்குப் பரவாது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும், சித்திரத்தேர் மீண்டும் உபயோகிக்க முடியாத அளவுக்கு எரிந்துவிட்டது. நான்கு பேரால் நடத்தப்பட்ட இந்த நாசகாரச் செயற் பாடுகள் அனைத்தும் துல்லியமாக கோயில் பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியுள்ளன. இப்பதிவுகள் அனைத்தும் பொலிஸாரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் அமைந்திருக்கும் கட்டிடத்தின் குத்தகைக் காலம் மார்ச் 2011 உடன் முடிவடைந்து விட்டது.

கட்டிடத்தில் இருந்து உடனடியாகத் கோயிலை வெளிக்கொண்டு செல்லவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நீதிமன்ற தீர்ப்பிற்கமைய, அம்பாளுக்குச் சொந்தக்காணி கொள்வனவிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## தபால் ஊழியர்களின் பகிஸ்கரிப்பால் 23 இலட்சம் கடிதங்கள் தேக்கம்

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் பணி பகிஸ்கரிப்பானது, மக்களை பல்வேறு சிரமங்களுக்குள் தள்ளியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இப்பணி பகிஸ்கரிப்பு காரணமாக கடந்த நான்கு நாட்களில் 23 இலட்சம் கடிதங்கள் நிலுவையில் உள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

தபால் ஊழியர்களின் பணி பகிஸ்கரிப்பு காரணமாக, இந்த வருடம் சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் கூட அவர்களுக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவு

(கொழும்பு)



கொழும்பில் மீண்டும் குடியிருப்பாளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று முன்தினம் கொட்டாஞ்சேனை பொலிஸ பிரிவுக்கு உட்பட்ட ஜம்பட்டா வீதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப் பொலிஸ் பதிவு நடவடிக்கையில் ஓர் அம்சமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவிக்கையில், பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76 ஆம் பிரிவின் கீழ் இப் பதிவு நடைபெறுகிறது.

இது குறித்து எவரும் அச்சம் அடையத் தேவையில்லை. தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து இன, மத, மொழி வேறுபாடின்றி நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பதிவு செய்யப்பட்டு வருகிறது எனக் குறிப்பிட்டார்.

எனினும் பொதுமக்கள் இந்தப் பதிவு நடவடிக்கை குறித்து பல்வேறு அச்சங்களை தெரிவித்து வருகின்றனர். பொது நிர்வாக அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படும் பதிவு நடவடிக்கைகளுக்கு அமைவாக இந்தப் பொலிஸ் பதிவு நடவடிக்கைகள் இருக்கின்றனவா என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் நோக்கிலேயே இந்த பதிவு நடவடிக்கை இடம்பெறுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்து குறிப்பிடத்தக்கது.

## 3440 ஆயுதங்கள் ஒப்படைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் வைத்திருந்த 3440 ஆயுதங்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது. பொதுமக்களிடம் உள்ள ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்குமாறு பொலிஸார் விடுத்த உத்தரவிற்கு அமைய இவ்வாறு ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை, கந்தளாய், திருகோணமலை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் வசமிருந்த ஆயுதங்கள் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆயுதங்களை பொறுப்பேற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் அடுத்த வாரத்துடன் முடிவடைவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அதன் பின்னர் மாகாணத்தில் காணப்படும் சட்டவிரோத ஆயுதங்களை கண்டு பிடிக்கும் நோக்கில் பாரியளவிலான தேடுதல் வேட்டைகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களில் அதிகமானவை எல்லைப்புற சிங்கள கிராமங்களின் பாதுகாப்பிற்காக பொதுமக்களுக்கு வழங்கப் பட்டவை என தெரிவிக்கப்படுகிறது.

32. காசேட்டு வங்கி நிரலின் செலவு மீதி ரூபா 5000 ஆகும். வங்கிக் கூற்று பின்வருவனவற்றை வெளிப்படுத்துகின்றது. வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட போதும் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படாத காசோலை ரூபா 1500 ஆகும். நிலையான கட்டளைக் கொடுப்பனவொன்றுக்கான ரூபா 750 வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றைத் தயாரித்த பின்னர் காசேட்டு வங்கி நிரலின் சரியான மீதி?
   1) ரூ.7250   2) ரூ.2700   3) ரூ.5750   4) ரூ.4250

**33, 34 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக. மேசை ஒன்றைச் செய்வதற்காக தச்சுத் தொழிலாளி ஒருவரால் உள்ளடக்கப்பட்ட செலவுகள் பின்வருமாறு**

| | ரூபா |
|---|---|
| மரம் | 5000 |
| தச்சுத் தொழிலாளியின் கூலி | 2500 |
| மெருகூட்டுதல் | 250 |
| மின்சாரம் | 500 |
| வாடகை | 750 |

33. மேசையின் முதற்கிரயம்?
   1) ரூ.7500   2) ரூ.7750   3) ரூ.9000   4) ரூ.9750

34. மேசையின் மேந்தலைக் கிரயம்?
   1) ரூ.1250   2) ரூ.1500   3) ரூ.4000   4) ரூ.7750

35. தொங்கற் கணக்கில் ரூபா 150 செலவு மீதியாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணமாக எது இருக்க முடியும்?
   1) அறவிடமுடியாக் கடன் ரூபா 150 இன்னமும் பதிவழிக்கப்படவில்லை
   2) விற்பனை நாளேட்டில் இருந்து விடுபட்ட விற்பனை ரூபா 150
   3) கொள்வனவுகள் ரூபா 150. கொள்வனவுக் கணக்கில் இரு தடவைகள் பதியப்பட்டுள்ளது
   4) மின்சாரக் கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா 75 வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதுடன் மின்சாரக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

**பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 36 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.**

"ஆதவன்" விளையாட்டுக் கழகத்தின் பொருளாளரால் 31.3.2011 முடிவடைந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த கொள்ளல் கொடுத்தல் கணக்கு வருமாறு,

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| மீதி கீழ் வந்தது | 10 000 | மின்கட்டணம் | 12 000 |
| அங்கத்தவர் கட்டணம் | 60 000 | பிரயாணச் செலவுகள் | 7 000 |
| கட்டிட நன்கொடை | 30 000 | தளபாடக் கொள்வனவு | 20 000 |
| நன்கொடைகள் | 2 000 | மோட்டார் கொள்வனவு | 30 000 |
| | | அச்சடித்தல், காகிதாதி | 2 000 |
| | | கட்டிடப் பராமரிப்பு | 6 000 |
| | | காவலாளி சம்பளம் | 11 500 |
| | | மீதி கீழ் சென்றது | 13 500 |
| | 102 000 | | 102 000 |

மேலதிக தகவல்கள்.
1. ஆண்டிறுதியில் மின்சாரம் தொடர்பில் ரூ.1200 அட்டுறுவாகும்.
2. காவலாளி சம்பளத்தில் எதிர்வரும் தைப்பொங்கலுக்குக் கொடுத்த முற் பணம் ரூ.2500 சேர்ந்துள்ளது.
3. ஆண்டிறுதியில் தளபாடம் ரூ.19000 எனவும் மோட்டார் வாகனம் ரூ.28500 எனவும் மதிப்பிடப்பட்டது.
4. இவ்வாண்டு தொடர்பில் வருமதியாக வுள்ள அங்கத்தவர் கட்டணம் ரூ. 4000 ஆகும்.

36. விளையாட்டுக் கழகத்தின் தொழிற்பாட்டு விளைவு,
   1) செலவிலும் கூடிய வருமானம் 26,300   2) வருமானத்திலும் கூடிய செலவினம் 26,300
   3) செலவிலும் கூடிய வருமானம் 28,800   4) வருமானத்திலும் கூடிய செலவினம் 28,800

37. விளையாட்டுக் கழகத்தின் ஆண்டுக்கான மொத்த வருமானம்,
   1) ரூ.64,000   2) ரூ.66,000   3) ரூ.62,000   4) ரூ.96,000

38. விளையாட்டுக் கழகத்தின் நிலையான சொத்துக்களின் பெறுமானம்.
   1) ரூ.50,000   2) ரூ.20,000   3) ரூ.47,500   4) ரூ.80,000

39. விளையாட்டுக் கழகத்தின் தொழிற்பாட்டு விளைவு வெளிப்படுவது,
   1) பரீட்சை மீதி   2) ஐந்தொகை
   3) வருமானச் செலவுக் கணக்கு   4) கொள்ளல் கொடுத்தல் கணக்கு

40. இக்கழகத்தின் 320 அங்கத்தவர் உள்ளனர். எத்தனை அங்கத்தவர்கள் இவ்வாண்டுக்கான சந்தாவைச் செலுத்த வில்லை?
   1) 40   2) 20   3) 32   4) 300





திரு. T.S.திலக்
(ஆசிரியர்)

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 2 மணி

# கல்வி முரசு

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - பகுதி I



S.சுகுமாரன்
(ஆசிரியர்)

**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

i) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
ii) **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என எண்ணிடப்பட்ட விடைகளின் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

01. அட்டவணை 1 இல் உற்பத்திச் செயலின் வகையும், அட்டவணை 2 இல் உற்பத்தியாளரின் வகையும் தரப்படடுள்ளன.

| அட்டவணை - 1 | அட்டவணை - 2 |
|---|---|
| 1. முதனிலை உற்பத்தி | A - பத்திரிகையாளர் |
| 2. இரண்டாம் நிலை உற்பத்தி | B - முகவர் |
| 3. தனிப்பட்ட சேவை உற்பத்தி | C - பொறியியலாளர் |
| 4. வர்த்தக சேவை உற்பத்தி | D - மீனவர் |

அட்டவணை 1 இல் உள்ள உற்பத்திச் செயலின் ஒழுங்கின்படி அட்டவணை 2 இல் உற்பத்தியாளரின் வகையைப் பொருத்தினால் கிடைக்கும் வரிசை பின்வருவனவற்றுள் எது?
   1) A, B,C,D   2) B, C,A,D   3) C, D,A,B   4) D, C,A,B

02. பண்டமாற்று முறையின் மிகப்பிரதான குறைபாடு எது?
   1) இரட்டைப் பொருந்துகை இன்மை
   2) பெறுமதிகளை அளவிடுவதில் இணக்கமின்மை
   3) சேமிக்க அல்லது வைத்திருக்க இயலாமை
   4) எடுத்துச் செல்லல் சிரமம்

03. வணிகக் கருமங்களின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடியது
   1) மக்கள் சூழல்   2) அரசியல், சட்டச்சூழல்   3) அகவணிகச் சூழல்   4) புறவணிகச் சூழல

04. வணிகத்திட்டத்தைத் தயாரிக்கும் போது பின்வருவனவற்றில் எது வணிகங்களின் சமூகப் பங்களிப்புக் குறித்து குறைந்த முக்கியத்துவம் கொள்வது,
   1) இலாபத்தை உச்சப்படுத்துதல்   2) சூழல் பாதுகாப்பு
   3) கொள்வனவு சக்தி அதிகரிப்பு   4) நுகர்வோரின் சுகாதார நலன்

05. பதிவு செய்வதால் தனித்தன்மை (சட்டஆளுமை) பெறக்கூடிய வணிக நிறுவகம்,
   1) தனியுடமை   2) பங்குடமை   3) கூட்டிணைந்த கம்பனி   4) கூட்டு முயற்சி

06. தனியார் உடமையாக அரசாங்க அனுசரணையுடன் சேவை நோக்கமாகத் தொழிற்படும் வணிக நிறுவன வகை,
   1) தனியுடமை   2) அரச திணைக்களம்   3) அரச கம்பனி   4) கூட்டுறவுச் சங்கம்

07. அலகுக்கிரயம், இலாபஎல்லை, அலகொன்றின் விலை போன்றன எவ்வகை வணிகத்திட்டம் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டும்.
   1) சந்தைப்படுத்தல் திட்டம்   2) உற்பத்தி / செயற்பாட்டுத் திட்டம்
   3) நிதித்திட்டம்   4) மனிதவளத் திட்டம்

08. மனித வளத்திட்டத்தில் உள்ளடங்காத விடயம்
   1) எதிர்கால ஊழியத் தேவை   2) தற்போதைய ஊழியர் எண்ணிக்கை
   3) ஊழியர்கட்கான சம்பளத் திட்டம்   4) தேவைப்படும் ஊழியர் எண்ணிக்கை

09. வங்கி வைப்பு மூலமான சேமிப்புகளுக்கு மக்களிடையே பிரபல்யமானது,
1) மக்கள் வங்கி 2) தேசியசேமிப்பு வங்கி 3) இலங்கை வங்கி 4) ஹற்றன் நஷனல் வங்கி

10. ஆயுள் காப்புறுதிக்குப் பொருத்தமற்ற தத்துவம்,
1) காப்புறுதி உரித்து 2) உச்ச நம்பிக்கை 3) இழப்பீடு 4) அண்மைக் காரணம்

11. சிறப்புக் கோடிடுதலுக்கு இன்றியமையாத அம்சம்,
1) இரு கோடுகளை இடுதல்
2) கோடுகளுக்கிடையில் வணிக வங்கியின் பெயர் சேர்த்தல்
3) கோடுகளுக்கிடையில் விசேட பதங்களைச் சேர்த்தல்
4) கோடுகளுக்கிடையில் கைமாற்றத்தகாதது என எழுதுதல்

12. கட்டணம் குறைந்ததும் இலகுவான, விரைவான, தெளிவான கட்புல தொடர்பாடல் முறை
1) மின்னஞ்சல் 2) குறுந்தகவல் சேவை 3) செல்லிடத் தொலைபேசி 4) இணையம்

13. சர்வதேச பயணங்களுக்கு அதிகம் விரும்பப்படுவது,
1) விமானம் 2) சமுத்திரக் கப்பல் 3) புகையிரதம் 4) பேருந்து

14. களஞ்சியப்படுத்தலின்போது குறைந்த கவனம் கொள்வது,
1) பொருத்தமான பாதுகாப்பு முறை
2) முறைப்படி பெறுதல், வழங்குதல்
3) இருப்பு அறிக்கைகள் பேணல்
4) நுகர்வோரின் தேவைக்கேற்ற பொருளை வழங்குதல்

15. சிறிய முதலீட்டாளர்கள் பாரிய முதலீட்டு வழிமுறைகளில் முதலீடு செய்து நட்ட அச்சம் குறைக்க சிறந்த முதலீட்டு வழிமுறை,
1) சாதாரண பங்கு 2) முன்னுரிமைப் பங்கு 3) நம்பிக்கை அலகுகள் 4) தொகுதிக் கடன்கள்

16. நீண்டகால, முறைமையான ஒரு முதலீட்டு வழி,
1) திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்தல்
2) காணி கொள்வனவு செய்தல்
3) பங்குகள் கொள்வனவு செய்தல்
4) தங்க நகைகள் கொள்வனவு செய்தல்

17. அலகுக் கிரயம் கணிப்பிட உற்பத்தி வெளியீட்டு அலகுகளால் வகுக்கப்படுவது,
1) மூலக்கிரயம் 2) மேந்தலைக் கிரயம் 3) மொத்தஉற்பத்திக் கிரயம் 4) முதற்கிரயம்

18. மோட்டார் வாகனம் கிரயம் ரூ.20000. ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு ரூ.3000. வாகனத்தின் எஞ்சிய பெறுமதி ரூ.5000. விளைதிறனுடைய ஆயுள்காலம் எத்தனை வருடங்கள்?
1) 15 வருடங்கள் 2) 5 வருடங்கள் 3) 10 வருடங்கள் 4) 20 வருடங்கள்

19. வெண்ணிலா வெதுப்பகத்தின் தை மாத விற்பனைகள் ரூ.135 000 வியாபாரக் கழிவு 10 வீதம். பாணின் இறாத்தல ஒன்றுக்கான விலை ரூ.30. தை மாதத்தில் எத்தனை இறாத்தல் பாண் விற்பனையானது?
1) 27 000 2) 30 000 3) 5000 4) 10 000

20. வணிகத்தின் மிக்க திரவத்தன்மை வாய்ந்த சொத்து,
1) சரக்கிருப்பு 2) வங்கிக்கடன் 3) வங்கியிலுள்ள காசு 4) கையிலுள்ள காசு

**பின்வரும் தகவலைப் பயன்படுத்தி 21ஆம், 22ஆம் வினாக்களுக்கு விடைதருக.**

15 மார்ச் 2010 இல் நர்மதனின் வணிகம் தொடர்பான சில தகவல்கள் வருமாறு,

| | |
|---|---|
| கட்டடங்கள் | ரூ. 75000 |
| சரக்கிருப்பு | ரூ. 15000 |
| கடன்பட்டோர் | ரூ. 10000 |
| வங்கிக் கடன் | ரூ. 25000 |



21. இவ்வணிகத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைச் சரியாகவும் வரிசைக் கிரமமாகவும் தரும் விடையைத் தெரிவு செய்க.
1) ரூ.100,000, ரூ.25,000 2) ரூ.100,000, ரூ.35,000 3) ரூ.90,000, ரூ.35,000 4) ரூ.75,000, ரூ.50,000

22. மதன் வணிகத்தின் மூலதனம்,
1) ரூ.75,000 2) ரூ.55,000 3) ரூ.45,000 4) ரூ.25,000

23. தனது வணிகத்துக்கான திலகன் என்பவர் ரூ.25,000 வங்கிக் கடன் ஒன்றைப் பெற்றுக் கொண்டதற்குப் பொருத்தமான சரியான இரட்டைப் பதிவு எது?
1) காசுக் கணக்கு வரவு-வங்கிக் கணக்கு செலவு
2) வங்கிக்கு கணக்கு வரவு-கடன் கணக்கு செலவு
3) வங்கிக் கணக்கு வரவு-மூலதனக் கணக்கு செலவு
4) காசுக் கணக்கு வரவு-வங்கிக் கணக்கு செலவு

24. வணிகமொன்றினால் சரக்குகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டால் இதன் விளைவாக,
1) சொத்துக்களும் பொறுப்புகளும் அதிகரிக்கும்
2) சொத்துக்களும் செலவுகளும் அதிகரிக்கும்
3) சொத்துக்களும் மூலதனமும் அதிகரிக்கும்
4) சொத்துக்கள் அதிகரிக்கும்போது பொறுப்புக்கள் குறைவடையும்

25. காசேட்டின் வரவுப் பக்கத்தில் கொடுக்கல் வாங்கலைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தும் மூல ஆவணம்,
1) பற்றுச்சீட்டு 2) வரவுத்தாள் 3) கொடுப்பனவு உறுதிச்சீட்டு 4) பட்டியல்

26. அரிசி விற்பனை வணிகமொன்றினை நடத்திச் செல்லும் மூர்த்தி கடந்த மாதத்தில் ஒரு கிலோ ரூ.60 வீதம் 10000 கிலோ அரிசியை 10 வீதக் கழிவுடன் விற்பனை செய்துள்ளார். சகல விற்பனைகளும் கடனுக்குச் செய்யப்பட்டன. கடன்பட்டோரிடமிருந்து அவருக்கு ரூ.560000 கிடைத்துள்ளது. கடந்த மாதத்தில் அவரது வணிகத்தின் விற்பனைகள் எவ்வளவு?
1) ரூ.660,000 2) ரூ.600,000 3) ரூ.560,000 4) 540,000

27. வங்கி இணக்கக் கூற்றைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் ஓர் உருப்படி பின்வருவனவற்றுள் எது?
1) வங்கிக் கட்டணம் 2) நேரடிச் செலுத்துகை
3) தேறாத காசோலைகள் 4) நிலைக்கட்டளை மீது கொடுப்பனவுகள்

28. வணிகமொன்றில் சில்லறைக் காசேட்டைப் பேணி வருவதால் பெறத்தக்க ஓர் அனுகூலம் பின்வருவனவற்றுள் எது?
1) பிரதான காசேட்டின் கொடுக்கல் வாங்கல்களின் செம்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றமை
2) பிரதான காசேட்டுப் பொறுப்பாளரின் பணிகளைக் குறைத்துக் கொள்ள முடிகின்றமை
3) வணிகத்தின் சில்லறைச் செலவுகளைக் குறைத்துக் கொள்ள முடிகின்றமை
4) சில்லறைக் காசினால் செய்த கொடுப்பனவுகளை மீள்நிரப்ப முடிகின்றமை

29. கட்டடப் பழுது பார்த்தற் செலவு ரூ.10,000 இனைக் கட்டடக் கணக்கின் வரவுப் பக்கத்தில் குறித்தல்.
1) ஈடுசெய்யும் வழுவாகும் 2) ஏற்படுத்தப்பட்ட வழுவாகும்
3) கோட்பாட்டு வழுவாகும் 4) தவறவிட்ட வழுவாகும்

30. செலுத்திய தரகு ரூ.400 பெற்ற தரகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தவறைத் திருத்துவதற்காகத் தொங்கற் கணக்கில்,
1) ரூ.400 வரவு வைத்தல் வேண்டும் 2) ரூ.400 செலவு வைத்தல் வேண்டும்
3) ரூ.800 வரவு வைத்தல் வேண்டும் 3) ரூ.800 செலவு வைத்தல் வேண்டும்

31. மாதர் சங்கத்தின் அங்கத்தவர் தொகை 300 ஆகும். மாத அங்கத்துவக் கட்டணம் ரூ.20 ஆகும். 10 அங்கத்தவர்கள் 2010 ஆம் ஆண்டுக்காக ஆறு மாத அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை. 2010 ஆம் ஆண்டுக்கான பெறுவனவு - கொடுப்பனவுக் கணக்கில் பதிவு செய்யப்படும் அங்கத்துவக் கட்டணம் யாது?
1) ரூ.72,000 2) ரூ.70,800 3) ரூ.69,600 4) ரூ.36,000

# சங்கரி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில்...

சமாதானம் வந்து பல தடவை எமது கதவைத் தட்டியது. நாமே அதனை வெளியில் விட்டு பூட்டியுள்ளோம். பல பிரிவினர் சேர்ந்து ஒன்றிணைந்து ஒரு முடிவை எடுப்பதன் மூலம் இனப்பிரச்சினைகக்கு தீர்வு காணவேண்டும் என தொடர்ந்து அடம் பிடிப்பீர்களேயானால் அது உங்களால் முடியாது என நான் பந்தயம் கட்டுகின்றேன்.

தமிழர்களுககும் ஏனைய சிறுபான்மையினருக்கும் உள்ள பிரச்சினை என்ன என்பதனை நீங்கள் அறிவீர்கள். சிறுபான்மையினருக்கு எத்தகைய தீர்வு ஏற்புடையதாக இருக்கும் என்பது நீங்கள் அறியாதது அல்ல. இதற்கு பாராளுமன்ற பெறுக்குக குழுவோ பிறருடன் சந்திப்புக்களை நடத்துவதன் மூலமோ அல்லது சர்வ கட்சி மகாநாடோ தேவையில்லை.

அதேபோல் ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காண பிடிவாதம் பிடிப்பீர்களேயானால் நீங்கள் தமிழர் கூடிய வட-கிழக்குப் பிரதேசங்களில் உள்ள சகல தொகுதிகளிலும் உங்களுடைய கட்சி வெற்றியீட்டினாலும், உங்களால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது.

ஒற்றையாட்சி தீர்வு சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு ஏற்புடையதாகாது. நானும் நீங்களும் இல்லாத காலத்தில் அத்தகைய தீர்வு யாரேனும் தலையிட்டு குழப்ப முடியும். இதனால் தான் அது ஒரு நிரந்தரத் தீர்வாக அமையாது. நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திய இந்திய முறையிலான தீர்வே சிறுபான்மையினருக்கு, சமஷ்டிக்கு ஒரேயோரு மாற்றாக ஏற்புடையதாக இருக்கும். சமஷ்டி என்ற வார்த்தை சிலருக்கு பிடிக்காமல் போனாலும், அதுவே மிகச்சிறந்த தீர்வாக அமையும். ஒற்றையாட்சி என்ற வார்த்தையும் மற்றைய சாராருக்கு பிடிககாத வார்த்தையே. நாடு பிளவுபடும் எனற தப்பான கருத்துக் கொண்டவர்களுக்கு சில விளக்கங்களை நீங்கள் கொடுப்பீர்களேயானால் அவர்கள் நிச்சயமாக சமஷ்டி முறையை ஏற்பார்கள் என உறுதியாக நம்புங்கள். நீங்கள் வேண்டுமானால் நாட்டைப் பிரிக்கின்ற நடவடிக்கையை முறியடிக்க அரசியல் சட்டத்தில் எத்தகைய அம்சங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். அதே நேரத்தில் நாம் எல்லோரும் சமன் என்பதனையும் சமமாக நடத்தப்படுவோம் என்பதனையும், எத்தகைய அடக்கு முறைக்கும் கட்டுப்படுத்தப்படமாட்டார்கள் என்பதனையும், சட்டத்தை மீறும் அதிகாரிகளுக்கு கடும் தண்டனை விதிக்கக் கூடிய வகையில் உருவாக்குங்கள்.



இந்த அடிப்படையில் நீங்கள் நினைத்தால் தீர்வை எட்ட முடியும் என்பதனை நான் உறுதியாக நம்புகின்றேன். சகல கட்சித் தலைவர்களுடனும் மற்றும் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கும் பிரமுகர்களுடனும் சேர்ந்து ஒரு தீர்வை தயாரித்து ஏற்புடைய நியாயமான மாற்றங்களை பிரேரித்து விரும்புகின்றவர்கள் செயற்படக் கூடிய வகையில் தீர்வை நாட்டிற்கு முன்வையுங்கள்.

# தேசியத்தின் தீவிரவாதக் குரல்



புதுடில்லி மாநாட்டில் தேசியம், சுயநிர்ணயம் என்ற நிலைப்பாட்டிற்கு எதிராக கூட்டமைப்பு சென்றமைக்கு இந்தியாவின் செல்வாக்கே காரணம். தமிழ்த் தேசியத்திற்கான அரசியல் செயற்பாடு புலம்பெயர் நாடுகளில் தான் அதிகமாக இருக்கின்றது. அதனை மழுங்கடித்து கையகப் படுத்துவதற்காகவே கூட்டமைப் பின் அமெரிக்கப் பயணமும் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியத்திற்கான அடித்தளம் வலுவாக இருப்பதனால் இந்தியக் கொள்கைகளை தமிழ்மக்களிடம் விற்க கூட்டமைப்பினரால் முடியவில்லை. அதனால் இரட்டைவேடம் போட முயற்சிக்கின்றனர். தமிழ் மக்கள் மத்தியில் தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றிற்காக போராடப் போவதாக வீரவசனம் பேசுகின்றனர். ஆனால் நடைமுறையில் இந்தியக் கொள்கைகளை பின்பற்றுகின்றனர். சம்பந்தனும் சுமந்திரனும் தயங்கித் தயங்கி இந்தியாவின் கொள்கைகளை சில இடங்களில் விற்க முயல்கின்றனர். முழுமையாகப் பிரசாரம் செய்யும் துணிவு அவர்களுக்கு இன்னும் வரவில்லை.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பதைப் பகிரங்கமாகக் கைவிட்டால் தமக்கு இருப்பு இல்லை என்பது கூட்டமைப்பினருக்கு நன்றாகத் தெரியும். அவற்றைக் கைவிட்டால் கூட்ட மைப்பு தமிழ் மக்களுக்குத் தேவையில்லை. டக்ளஸ் தேவானந்தாவே போதும். கூட்டமைப் பினரைவிட நெருக்கமான தொடர்பு டக்ளசிற்கு மக்களிடம் உண்டு.

இந்த உண்மைகள் மக்கள் களத்தில் செயற்படும் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியும். அதனால் இந்தியாவின் கொள்கைகளை மக்களிடம் விற்க அவர்கள் முயல்வதில்லை. சம்பந்தனும் சுமந்திரனும் மக்கள் களத்திற்கு வருவதில்லை. அதனால் புலம்பெயர் நாடுகளில் மட்டும் அதனை விற்க முயல்கின்றனர்.

கூட்டமைப்பின் உள் முரண்பாட்டினால் மாற்றுத் தலைமையாக வருவதற்கு ஆனந்தசங்கரி முயற்சிக்கின்றார். இந் தியாவும் அதனை ஊக்குவித்து வருகின்றது. வவுனியா உண்ணா விரதத்தினை அதற்கான களமாக ஆனந்தசங்கரி பயன் படுத்தினார். சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும், செல்வம் அடைக்கல நாதனுக்கும் தமிழரசுக் கட்சித் தலைமையோடு பேரம் பேசுவதற்கு ஆனந்தசங்கரியில் தங்கியிருப்பதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. புதுடில்லி மாநாட்டில் தேசியம், சுயநிர்ணயம் என்பதைச் சேர்த்தால் அறிக்கையில் கையொப்பமிடமாட்டேன் என அடம்பிடித்தவர் ஆனந்தசங்கரி. அவர்தான் மாற்றுத் தலைமையென்றால் தமிழ் மக்களின் தலைவிதியை யாரிடம் சொல்லி அழுவது.

-முத்துக்குமார்

கட்டுரையிலிருந்து...

# ரொட்டி, ஆயிரம் பேர் சாப்பிடலாம்!

இந்திய வட மாநிலங்களில், "நான்" என அழைக்கப படும் ரொட்டி, மிகவும் பிரபலமான உணவு. மைதா, வெண்ணெய், நெய், பால் போன்ற பொருட்களில் தயாராகிறது. தற்போது சீனாவிலும், இது பிரபலமாகி வருகிறது. வித, விதமான வடிவங்கள், சுவைகளில், இதை தயார் செய்து, ரசித்து, ருசித்து வருகின்றனர், சீன மக்கள.



இங்குள்ள கியாமோ மாகாண அரசுக்கு, ஒரு விசித்திர ஆசை ஏற்படடது. உலகிலேயே மிகப் பெரிய, "நான் தயார்செய்ய வேண்டும் என்பது தான், அந்த ஆசை. அங்குள்ள பிரபலமான சமையல் கலைஞரை அழைத்து, இதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி அரசு உத்தரவிட்டது. அந்த சமையல் கலைஞரும், தனக்கு, 12 உதவி யாளர்களை வைத்துக் கொண்டு, மிகப் பெரிய, "நான்" தயாரிக்கும் முயற்சியில் இறங்கினார்.

மைதா, 124 கிலோ, 30 கிலோ ஆட்டிறைச்சி, 16 கிலோ வெங்காயம் ஆகியவற்றைக் கொண்டு, ஒன்பது அடி சுற்று வட்டமுள்ள பிரமாண்டமான, ருசியான, 'நான்" தயார் செய்யப்பட்டது. இதை தயார் செய்த சமையல் கலைஞர், "இது ஒரு சாதனை முயற்சி. இதை, ஆயிரம் பேர் சாப்பிடலாம்..." என, பெருமிதத்துடன் கூறினார கியாமோ மாகாண பொது மக்களோ, "சாதனை செய்ய வேண்டியது தான். அதற்கு, மக்களின் வரிப் பணத்தை ஏன் வீணடிக்க வேண்டும். கடைத் தேங்காயை எடுத்து, வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக இருக்கிறதே.." என, வேதனைப்பட்டனர்.

# புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம்

- டி.பி.எஸ்.ஜெயராஜ்



பரிதி என்று இப்போது அறியப்படும் மதீந்திரன் 2003 இல் நகரத்தின் வெளிச்சத்துக்கு வந்து பிரான்சில் எல்.ரீ.ரீ.ஈயின் கட்டுப்பாட்டைப் பொறுப்பேற்றுக் கொணடார். பிரான்சின் முன்னணி அமைப்பான தமிழர் ஒருங்கிணைப்புக் குழு(ரி.சீ.சீ)வின் கீழ் எல்.ரீ.ரீ.ஈ இயங்கி வந்தது. அதன் தலைமையகம் பரீசில் உள்ள பைரனீஸ் வீதியில் 341 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. பரிதி பிரான்சின் ரி.சீ.சீயின் புதிய தலைவரானார்.

குறிப்பிடத்தக்க முன்னைய விதிமுறைகளையெல்லாம் கடந்து வந்த பரிதி எதிர்காற்றினை எச்சரிக்கையுடன் தூக்கி எறிந்துவிட்டு செய்தி வெளியீடுகள், அறிவிப்புகள் மற்றும் மேடை நிகழ்வுகள் என்பனவற்றை ரி.சீ.சீ யினை ஒரு மறைப்பாகப் பயன்படுத்தாது எல்.ரீ.ரீ.ஈ - பிரான்ஸ் என்ற தலைப்பிலேயே வழங்கத் தொடங்கினார். நீண்டகால நடைமுறையில் இத்தகைய திடீர் நகர்வுகளை உணர்ந்து கொள்ளத் தவறிய பிரபாகரன் மற்றும் கஸ்ட்ரோவினால் இம் முயற்சிகள் பெரிதும் வரவேற்கப்பட்டன.

ஆனால் இத்துடன் இது நின்று விடவில்லை. பிரான்சிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ முன்னெப்போதுமில்லாத வகையில் செயற்படத் தொடங்கியது. அவர்கள் காணத்தவறிய உண்மை என்னவென்றால் அவர்கள் வாழும் நாடாகிய பிரான்ஸ் சுதந்திரம், சமத்துவம், மறறும் தோழமை என்பனவற்றுக்கு உலகளாவிய வகையில் பிரசித்தம் பெற்ற நாடு என்பதை.

புலிகள் இதை மறந்து தாங்கள் ஸ்ரீலங்காவின் வடக்கு மற்றும் கிழக்கில் பயன்படுத்திய ஒரேமாதிரியான முறைகளையும் உத்திகளையும் இங்கேயும் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். புரட்சிகரமான பிரான்சிய வரலாற்றின் தலையையே துண்டிப்பதைப்போல ஒரு பயங்கரவாத ஆட்சி அங்குள்ள தமிழ் மக்கள்மீது ஏவி விடப்பட்டது.

பரீஸில் உள்ள தமிழரின் சனத்தொகை சுமார் அறுபதிலிருந்து அறுபத்தைந்தாயிரம் வரை இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அதேவேளை பிரான்சிலுள்ள மொத்த தமிழ் மக்களின் எண்ணிக்கை சுமார் எழுபதிலிருந்து எழுபத்தைந்தாயிரம் வரையாக இருக்கலாம் எனக் கணிப்பிடப் பட்டுள்ளது. அவர்களில் 25 விகிதமானவர்கள் கடும்போக்குள்ள எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள். அதேவேளை இன்னொரு 25 விகிதமானவர்கள் தீவிரமான எல்.ரீ.ரீ.ஈ எதிர்ப்பாளர்கள். மீதமுள்ள 50 விகிதமான தமிழ் மக்கள் எந்தவித கடும்போக்கோ தீவிர எதிர்ப்போ இல்லாத எல்.ரீ.ரீ.ஈ சார்பானவர்களோ அல்லது எதிர்ப்பாளர்களோ அல்ல.

பரிதியின் கீழ் பரிசில் இயங்கிய எல்.ரீ.ரீ.ஈயினர் அச்சுறுத்தல், கப்பம் பெறல், உடல் ரீதியான வன்முறைகள் மற்றும் புலி எதிர்ப்பு செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக சட்டவிரோத தடுத்து வைப்பு மற்றும் பணம் வழங்குமாறு தமிழ் மக்களை கட்டாயப் படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். நிதி சேகரிக்கும் பணியானது, சேகரிக்கப்பட்ட பணத்தின் 20 விகிதம் அவர்களுக்குத் தரகுப் பணமாகத் தரப்படும் என்கிற நிபந்தனையில் வெளிப் பணியாளர்களான சில தமிழ் கும்பல்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதில் முன்னணியில் உள்ள இரண்டு கும்பல்களில் ஒன்று 'வெண்ணிலா' குழு மற்றது 'முக்காபலா' குழு ஆகும்.


ஒவ்வொரு குடும்பமும் வருடாந்தம் குறைந்தது 2,000 யுரோக்களைச் செலுத்த வேண்டும். வணிக நிறுவனங்கள் வருடாந்தம் 6,000 யுரோக்களைச் செலுத்த வேண்டும். ஆனால் நேரத்துக்கு நேரம் விசேட சேகரிப்புகள் நடத்தப்பட்டு பெரிய தொகைகள் கோரப்படும். ஒரு மதிப்பீட்டின்படி வருடாந்த சேகரிப்புகள் மூலம் ஆறுமில்லியன் யுரோக்களும் விசேட சேகரிப்புகள் மூலம் 20 மில்லியன் யுரோக்களும் சேகரிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்தப் பணத்தின் பெரும்பகுதி தவணை முறையில் செலுத்தப்பட்டு வந்துள்ளது. கும்பல்களும் அதேபோல வழமைக்கு மாறான சுறுசுறுப்பு உள்ள எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்களும் பணம் கறப்பதற்காக சாத்தியமானளவு பாதிக்கப்பட்டவர்கள் மீது அழுத்தம் பிரயோகித்து வந்தனர். அவர்கள் பெரும்பாலும் மக்களைக் கட்டாயப் படுத்துவதற்காக வீடுகளுக்குச் செல்லும் போது இரும்புகளுடனும் பொல்லுகளுடனும் மற்றும் போத்தல்களுடனுமே சென்றனர். சில அடிகளைப் பரிமாறல், கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தல், ஸ்ரீலங்காவிலுள்ள குடும்ப அங்கத்தவர்களுக்கு ஊறு விளைவிக்கப் போவதாக அச்சுறுத்தல் மற்றும் தளபாடங்களையும் வாகனங்களையும் சேதப்படுத்தல் போன்ற உத்திகளே வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இதில் மோசமானது என்னவென்றால் ஆட்களை கடத்திக் கொண்டுசென்று அவர்களை சட்டவிரோதமாக தடுத்து வைத்திருப்பது. பரிசின் சுற்றுப்புறப் பகுதியில் ஒரு பண்ணையொன்று இதற்காகவே இவர்களால் வாங்கப்பட்டுள்ளது. கோஷ்டிகளால் அல்லது எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்களால் கடத்தப்படும் தமிழர்கள் அங்கு கொண்டு செல்லப்படுவார்கள். அவர்களை விடுதலை செய்வதற்காக பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினரிடமிருந்து பெருந்தொகையான பணம் கோரப்படும். பண்ணையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர் அடித்து துன்புறுத்தப் படுவார். இதில் அதிர்ச்சி ஊட்டுவதாக உள்ளது என்னவென்றால் எல்.ரீ.ரீ.ஈ ஸ்ரீலங்காவின் வடக்கு மற்றும் கிழக்கில் என்ன செய்தார்களோ அதை ஐரோப்பாவிலும் பரப்புவதற்கு எண்ணியது தான்.

(தொடரும்...)

# 2ஜி வழக்கில் சிதம்பரத்தைக் காப்பாற்ற சி.பி.ஐ. முயற்சி, பா.ஜ.க. குற்றச்சாட்டு



(புதுடில்லி)


2ஜி வழக்கிலிருந்து சிதம்பரத்தைக் காப்பாற்றும் கடைசி முயற்சியில் சி.பி.ஐ இறங்கியுள்ளதாக பா.ஜ.க. குற்றஞ்சாட்டியுள்ளது. இது குறித்து அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் பிரகாஷ் ஜவடேகர் நேற்றுமுன்தினம் கூறியதாவது, 2ஜி வழக்கில் அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது சி.பி.ஐ. இது சிதம்பரத்தைக் காப்பாற்றுவதற்காக நடைபெறும் அரசியல் சதி மற்றும் குழிதோண்டும் வேலையாகும்.

சிதம்பரத்துக்கு எதிரான ஆதாரங்களை சமீபத்தில் அரசிடம் வழங்கியுள்ளோம். அப்போதைய நிதியமைச்சரான சிதம்பரத்தின் ஒப்புதலுக்குப் பிறகே 2 ஜி ஒதுக்கீடு நடைபெற்றது என்பதை பிரதமரும் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே 2ஜி வழக்கில் சிதம்பரம், ஆ.ராசா இருவருக்கும் சம அளவில் பங்குள்ளது என்றார்.

இதேவேளை பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக இருந்த பிரமோத் மகாஜனுக்கு எதிராக சி.பி.ஐ புதிய வழக்கைப் பதிவு செய்திருந்தது. இது குறித்துப் பேசிய அவர், "2ஜி வழக்கின் விசாரணையை திசை திருப்பும் முயற்சியில் இறங்கியுள்ளது சி.பி.ஐ. தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு சரியான கொள்கை முடிவுகளை எடுத்தது. இப்போது அரசியல் சதி நடந்துள்ளது.

இது 2ஜி வழக்கில் இருந்து சிதம்பரத்தைக் காப்பாற்ற எடுக்கப்பட்டுள்ள முயற்சி. இது காங்கிரஸ் சார்பில் சி.பி.ஐ.யால் நிகழ்த்தப்படடுள்ள மிக மோசமான அரசியல் மோசடி. 2ஜி வழக்கில் காங்கிரஸ் உடந்தையாக இருந்துள்ளது. இது தனி நபர் செய்த ஊழல் அல்ல. இதில் காங்கிரஸ் உட்பட பலருக்கு பங்குள்ளது.

# முன்னாள் அமைச்சருக்கு ஐந்து ஆண்டுகள் சிறை



(புதுடில்லி)


1996 ஆம் ஆண்டு நரசிம்மராவ் பிரதமராக இருநத போது தொலை தொடர்புத்துறை அமைச்சராக இருந்தவர் சுக்ராம். இவர் ஐதராபாத்தை சேர்ந்த நிறுவனத்திற்கு உபகரணங்கள் வழங்க அனுமதி அளித்ததில் மத்திய அரசுக்கு 1 கோடியே 66 இலட்ச ரூபாய் இழப்பை ஏற்படுத்தியதாக புகார் எழுந்தது.

இது தவிர அரியானாவைச் சேர்ந்த ரெலிகொம் நிறுவனத்திற்கு ரூ.30 கோடி ரூபாய் ஒப்பநதங்கள் அளிக்க ரூ.3 லட்சம் இலஞ்சம் வாங்கியதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக சி.பி.ஐ வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில் சுக்ராம் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன.

இதனையடுத்து டில்லி நீதிமன்றம் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூபா 4 இலட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறியது. 85 வயதாகும் சுக்ராம் தன் வயதைக் குறிப்பிட்டு தனக்கு கருணை காட்டுமாறு நீதிமன்றத்தில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 2.11 கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் காணிக்கை



திருப்பதி தேவஸ்தானம் சார்பில் செயறபட்டு வரும் கோவில் உண்டியலில், பக்தர்கள் செலுத்திய தங்க ஆபரணங்களின் இந்திய மதிப்பு, 2 கோடியே 11 இலட்சத்து 22 ஆயிரத்து 478 ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது.

திருப்பதி, திருமலை வெங்கடேச பெருமாள் கோவில், திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவில், திருப்பதி கோவிந்தராஜ சுவாமி கோவில் உட்பட, 18 பெருமாள் கோவில்கள் திருப்பதி தேவஸ்தானம் சார்பில், செயறபட்டு வருகின்றன.

இந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை, 16 பெருமாள் கோவில் உண்டியல்களில், பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்திய ஆபரணங்களை, தேவஸ்தான நிர்வாகம் கணக்கிட்டது. இதில், ஒரு கோடியே 53 இலட்ச ரூபாய் மதிப்புள்ள தங்க ஆபரணங்கள், உண்டியல் மூலம் சேர்ந்துள்ளது.

# கூடங்குளத்தில் மின் உற்பத்தி மார்ச்சில் இந்திய அணு மின் கழகம் நடவடிக்கை

கூடங்குளம் அணு உலையில், போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, மார்ச் மாதத்திற்குள் மின் உற்பத்தியை ஆரம்பிக்க, இந்திய அணு மின் கழகம் திட்டமிட்டுள்ளது. கடந்த ஒக்டோபரில், உற்பத்தியை ஆரம்பிக்க வேண்டிய நிலையில், போராட்டத்தால் டிசம்பருக்கு தள்ளிப் போடப்பட்டது.

கூடங்குளம் அணு மின் நிலையம், 13,171 கோடி இந்திய ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதன் பணிகள், 99 சதவீதம் முடிந்து விட்டன. இந்நிலையீல், கடந்த ஜூலை முதல் ஒரு குழுவினர், இடிந்தகரை தேவாலய வளாகத்தில் முகாமிட்டு, அணு உலைக்கு எதிராக கோஷமிட்டு வருகின்றனர். மக்களுக்கு பல்வேறு நோய்கள் பற்றிய தகவல்களைக் கூறியதால், மக்கள் பீதியடைந்துள்ளனர். ,மக்களின் பீதியை தணிக்க, 15 நிபுணர்கள் அடங்கிய மத்திய குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவினர், போராட்டக்காரர்களின் 50 கேள்விகளுக்கு, ஆய்வின் அடிப்படையில், அறிவியல் ரீதியான, அனுபவ ரீதியான பதில்களை அளித்துள்ளனர். ஆனால், பதில்கள் திருப்தியில்லை என்றும், போராட்டம் தொடரும் என்றும், போராட்டக்காரர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர். கடந்த ஒரு மாதமாக, 200 விஞ்ஞானிகள் உட்பட, 960 அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள், எந்தப் பணிக்கும் செல்ல முடியாமல், அணு மின் நிலைய அதிகாரிகள் குடியிருப்பில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தில் இந்த அளவுக்கு எதிர்ப்புகள் ஏற்பட்டிருக்கும் நிலையிலும், இலங்கைக்கு கடல் வழியே மின்சாரம் அளிப்பதே இந்தியாவின் திட்டம். இதற்காகத்தான் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசு தீவிர முனைப்புக் காட்டுகிறது. 2010 ஜூன் 9 ல் இதற்கான ஒப்பந்தத்தில் இந்திய மின் உற்பத்திக் கழகமும், இலங்கை மின்வாரியமும் கையெழுத்திட்டுள்ளன. கூடங்குளத்தில் கிடைக்கவுள்ள மின்சாரத்தில் பாதிக்கும் குறைவான அளவே தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் என ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோ குற்றஞசாட்டியுள்ளார்.




# அத்வானியின் ரத யாத்திரை நிறைவு



(புதுடில்லி)

நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அத்வானியின் ரத யாத்திரை நேற்று நிறைவு பெற்றது. இந்தியாவில் மலிந்து விட்ட ஊழல், கறுப்பு பண விவகாரத்தை முன்னிறுத்தி மக்கள் மத்தியில் எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் விதமாக நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பா.ஜ., மூத்த த ஜன்ஷேத்னா ரத யாத்திரை நேற்று டில்லியில் நிறைவு பெறுற்றது.

கடந்த 39 நாட்களில் 22 மாநிலங்களில் முக்கிய நகரங்களில் மக்கள் பெருவாரியான வரவேற்பு அளித்தனர் . இதில் மக்கள் ஆதரவையும், எழுச்சியையும் காண முடிந்ததாக பா.ஜ., தலைவர்கள் தெரிவித்தனர். யாத்திரை பா.ஜ.,வுக்கு பெரும் செல்வாக்கு தேடித்தந்திருப்பதுடன் அத்வானி தான் பிரதமர் வேட்பாளர் என்று ஊர்ஜிதம் செய்திருப்பதாக என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

84 வயதை தொடும் அத்வானி வாஜ்பாய் தலைமையிலான அரசில் உள்துறை மற்றும் துணை பிரதமராக பதவி வகித்து, பல யாத்திரைகளை நடத்தி பா.ஜ,. வில் செல்வாக்கு பெற்ற அத்வானி நேற்று முடித்திருப்பது 6 வது யாத்திரை. கடந்த மாதம் 11 ம் திகதி பீகார் மாநிலம் சிதாப்தியாரா என்ற ஜெய்பிரகாஷ் நாராயணன் பிறந்த கிராமத்தில் இருந்து ஜன்ஷேத்னா (மக்களை சந்திக்கும்) யாத்திரையை பீகார் மாநல முதல்வர் நிதீஷ்குமார் (ஐக்கிய ஜனதாதளம்) கொடியைசைத்து துவக்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக தங்கியிருந்த ஈரானியர் கேரளாவில் கைது

கேரளாவில் மலப்புரம் மாவட்டம் தேஞ்சிப்பாலம் அருகே சேலம்புராப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வெளிநாட்டை சேர்ந்த முதியவர் பல ஆண்டுகளாக மனைவியுடன் தங்கி இருப்பதாக மாவட்ட எஸ்.பி.க்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

அவருடைய உத்தரவின் பேரில், பொலிஸார் அங்கு சென்று சோதனை நடத்தினர். அப்போது, வெளிநாட்டைச் சேர்ந்த அவர் சிக்கினார். அவர் ஈரான் நாட்டை சேர்ந்தவர். பெயர் சந்தீஸ் பாகடுரி (58) என விசாரணையில் தெரிய வந்தது. கடந்த 1979ல் மும்பை வந்த அவர், அந்த பகுதியைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்துள்ளார். பின்னர் அவரை விவாகரத்து செய்து விட்டு அவருடைய தங்கையை 2வதாக திருமணம் செய்து கேரளாவுக்கு வந்துள்ளார்.

99. ஆம் ஆண்டு மலப்புரம் மாவட்டம் சேலம்புராவில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி வசித்து வந்துள்ளார். அவரிடம் போலி கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்கள் இருந்தன. பொலிஸார் அவரை கைது செய்து திரூரங்காடி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# நித்யானந்தா- நடிகை ரஞ்சிதா எதிராக மானநஷ்ட வழக்கு

நித்யானந்தா மற்றும் நடிகை ரஞ்சிதா மீது ரூ.50 இலட்சம் நஷடஈடு கேட்டு இந்து மக்கள் கட்சி மாநில தலைவர் அர்ஜுன் சம்பத் கோவை நீதிமன்றில் அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

கோவையை சேர்ந்த இந்து மக்கள் கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜுன் சம்பத் மற்றும் அவருடைய மனைவி ஆகியோரை நித்யானந்தா அவதூறாகப் பேசியதாக புகார் கூறப்பட்டது. அப்போது நடிகை ரஞ்சிதாவும் உடன் இருந்ததாகக் கூறப்பட்டது. இதற்கு அர்ஜுன் சம்பத் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். நித்யானந்தாவை கண்டித்து இந்து மக்கள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

இதைதொடர்ந்து தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அர்ஜுன் சம்பத் கடந்த 8.8.2011 அன்று நித்யானந்தாவுக்கும், நடிகை ரஞ்சிதாவுக்கும் வக்கல் நோட்டீஸ் அனுப்பினார். ஆனால் அந்த நோட்டீசுக்கு அவர்கள் 2 பேரும் எந்த பதிலும் அளிக்கவில்லை.

இதனால் நித்யர்னந்தா மற்றும் நடிகை ரஞ்சிதா மீது அர்ஜுன் சம்பத் கோவை முதலாவது நீதிவான் நீதிமன்றில் அவதூறு வழக்கு தொடர்ந்தார். அதில் நித்யானந்தா மற்றும் நடிகை ரஞசிதா ஆகியோர் தனக்கு ரூ.50 இலட்சம் நஷ்டாடு அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளரர். இந்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதிவான் சத்தியமூர்த்தி 23 ஆம் திகதி மனு மீதான விசாரணை நடைபெறும் என்று கூறி தள்ளிவைத்தார்.

# பொது மக்கள் ஆரம்பித்த பஸ்சேவை

(சென்னை)

கேரளாவில் இடுக்கி மாவட்டம் கடப்பனை அருகே உள்ள ஊருக்கு தனியார் மற்றும் கேரள அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வந்தன. இங்குள்ள வீதி சேதமடைந்ததைத் தொடர்ந்து, பஸ்கள் இயக்குவதை நிறுத்தி விட்டனர்.

இதனால் பாதிக்கப்பட்ட ஊர் மக்கள், பஸ் வாங்கி இயக்குவதற்கு முடிவு செய்தனர். கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து, நிதி திரட்டிய பொதுமக்கள் பஸ் வாங்கி, அதற்கு கொச்சி தோவாளம் டிரான்ஸ்போர்ட் என பெயரிட்டனர்.

நேற்றுமுன்தினம் முதல் இந்த பஸ் இயக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியாளர் தேவதாசன் போக்குவரத்தை தொடககி வைத்தார். பஸ் நிறுத்தப்பட்டதை குறித்து யாரையும் குறை கூறாமல், ஊர் மக்களே ஒன்று சேர்ந்து பஸ் வாங்கி இயக்கி உள்ளது எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

உலகச் செய்திகள்

# பாகிஸ்தானிற்கு அமெரிக்கா எச்சரிக்கை



பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்கத் தவறினால் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கத் தயங்கமாட்டோம் என அமெரிக்காவின் ஆசிய-பசிபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பாதுகாப்புச் செயலராக நியமிக்கப்பட்டுள்ள மார்க் லிப்பெர்ட் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்புகளின் மீது, தலிபான், ஹக்கானி உள்ளிட்ட பயங்கரவாதக் குழுக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இத்தீவிரவாதக் குழுக்கள் பாகிஸ்தானை மறைவிடமாகக் கொண்டு செயற்பட்டு வருவதாலேயே அமெரிக்கா மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் பாகிஸ்தானை மறைவிடமாகக் கொண்டு செயற்படும் பயங்கரவாதக் குழுக்களினால் ஆப்கானிஸ்தானின் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் அதன் தலைமையிலான கூட்டுப்படைகளின் மீது நடத்தப்படும் தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது. தனது நாட்டின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக ஆப்கானிஸ்தான் மேற்கொண்டு வரும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஆதரவு தரவேண்டியது பாகிஸ்தானின் நியாயமான கடமையாகும் எனத் தெரிவித்தார்.


# மாவோயிஸ்ட் வீரர்களுக்கான புனர்வாழ்வுப் பணி ஆரம்பம்



நேபாளத்தில் உள்ள முன்னாள் மாவோயிஸ்ட் வீரர்களை இராணுவத்திலும், சமூகத்திலும் சேர்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

நேபாளத்தில், 19 ஆயிரம் மாவோயிஸ்ட் வீரர்கள் புரட்சிக்குப் பின், ஜனநாயக அரசியல் கொண்டு வரப்பட்டனர். இந்நிலையில், முன்னாள் மாவோயிஸ்ட்கள் மற்றும் அவர்களிடம் உள்ள ஆயுதங்களை என்ன செய்வது என்பது பற்றி, பல ஆண்டுகளாக குழப்பம் நீடித்து வந்தது. கடந்த நவம்பர் 1ஆம் திகதி, அந்நாட்டின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கூடி, இவ்விடயத்திற்கு ஒரு முடிவுக்கு வந்தனர். மாவோயிஸ்ட் வீரர்களில், 6,500 பேர் இராணுவத்தில் சேர்த்தல், உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் இந்த முடிவில் குறிப்பிடப்பட்டன. இதற்கான பணிகள் நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

# எரிந்த சாம்பலைக் கரைப்பதில்லை மணிகளாக்கி வழிபடுகின்றனர் பிள்ளைகள்



இறுதிச்சடங்கு செய்வது, இறந்தவர் உடல்களை அடக்கம், தகனம் செய்வது ஆகிய சடங்குகள் நாட்டுக்கு நாடு, பகுதிக்கு பகுதி வேறுபடுகிறது.

கடந்த 10 ஆண்டுகளாக தென்கொரியாவில் நூதன கலாசாரம் பரவி வருகிறது. இறுதிச் சடங்குகள் முடிந்த பிறகு உடலை தகனம் செய்கின்றனர். கடைசியாக கிடைத்த சாம்பலை பின்னர் சேகரித்து, அதிக வெப்பநிலையில் வைத்து சிறு சிறு மணிகளாக்குகின்றனர். அதிக வெப்ப நிலையில் நீண்ட நேரம் வைக்கப்படுவதால் சாம்பல் துகள்கள் உருகி, இறுகி சிறு சிறு உருண்டைகளாக மாறுகின்றன. கிரிஸ்டல் மணி போல வெளிர் நீல நிறத்தில் இருக்கும் இந்த உருண்டைகளை புத்தர் பொம்மையுடன் கூடிய கண்ணாடி குப்பியில் வைத்து மூடிவிடுகின்றனர். இச்சியான் நகரை சேர்ந்த போன்யாங் என்ற நிறுவனம் இந்த பணியை செய்து தருகிறது. இதற்கு செலவு சுமார் ரூ.43 ஆயிரம். ஒருவரது உடல் சாம்பலில் இருந்து 4 அல்லது 5 கப் கிரிஸ்டல் மணிகள் உருவாகின்றன.


இதுபற்றி கிம் நாம் என்பவர் கூறுகையில், அப்பா 27 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். 10 ஆண்டுகளுக்கு முன்பு அவரது உடலை தோண்டி எடுத்து, எரித்து சாம்பலாக்கி கிரிஸ்டல் ஆக்கி வைத்திருக்கிறேன். வழிபாட்டு அறையில் மணி வடிவில் இருக்கும் தந்தையை கும்பிட்டு விட்டுதான் தினமும் வேலையை தொடங்குகிறேன். இப்போதும் அவர் வீட்டிலேயே இருப்பது போல உணர்கிறேன் என்றார்.

# பிரிட்டனில் சில துறைகளில் வெளிநாட்டவருக்கு வேலை இல்லை

வெளிநாடுகளில் இருந்து பிரிட்டனுக்கு வேலைவாய்ப்பிற்காகச் செல்வோரின் எண்ணிக்கையைக் குறைக்கும் விதத்தில், உத்தியோக பூர்வமாக வேலை தேடிச் செல்லும் வேலைகான பட்டியலில் பல பிரிவுகளை பிரிட்டன் குறைத்து விட்டது.

இதனால், ஆண்டுக்கு 40 ஆயிரம் பேர் பிரிட்டனுக்குச் செல்ல இயலாத நிலை உருவாகும் ஐரோப்பிய யூனியன் அல்லாத இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானோர் வேலைதேடி பிரிட்டனுக்குச் செல்கின்றனர். வேலைகளுக்கான மிகத்திறன் வாய்ந்த நபர்கள், இரண்டாம் நிலை விசா மூலம் பிரிட்டனுக்குச் செல்லலாம். இந்நிலையில், இப்பட்டியலில் இடம் பெற்றிருந்த, உயர்நிலைக் கல்விப் பிரிவில் உயிரியல் ஆசிரியர்கள், குழந்தைகளுக்கான பேச்சு மற்றும் மொழி மருத்துவர்கள், கால் நடை மருத்துவர்கள், மருந்து தயாரிப்பாளர்கள், கண் மருத்துவர்கள் ஆகிய பணியிடங்கள் தற்போது நீக்கப்பட்டுள்ளன. இந்த திருத்தம் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக, பிரிட்டன் தெரிவித்துள்ளது.

# எஸ்.எம்.எஸ்.இல் வார்த்தைகளுக்குத் தடை




எஸ்.எம்.எஸ்.சில் வேண்டத் தகாத மற்றும் மதிப்பை குறைக்கும் வகையில் இடம் பெறும் வார்த்தைகளை உபயோகப்படுத்த பாகிஸ்தான் அரசு தடை விதித்து உள்ளது. முட்டாள் தனமாகவும், மற்றவர்களை சிறுமைபடுத்தும் விதத்தில் இருக்கும் உருது மற்றும் பஞ்சாபி மொழிகளில் உள்ள ஆயிரம் வார்த்தைகளுக்கு அந்நாட்டு அரசு தடைவிதித்துள்ளது. இதனால் ஆபசமான மற்றும் சட்டத்திற்கு விரோதமாக வெளியிடப்படும் செய்திப் பரிமாற்றத்தை தவிர்க்கலாம் என அரசு தீர்மானித்துள்ளது.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தில் சாரதி (தற்காலிகம்) பணிவெற்றிடமாக உள்ளது யாழ்ப்பாண நிலையத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் உள்ள பணிக்கு ஆர்வமுள்ளவர் 25.11.2011 காலை 10.00 மணிக்கு சான்றிதழ்களுடன் இல 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள பணிமனைக்கு நேரில் வரவும்.

கொழும்பு கோட்டை 4ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள பலசரக்கு மொத்த வியாபார நிலையத்திற்கு கணக்காளர் உட்பட வேலை ஆட்கள் தேவை ஆர்வமுள்ளவர்கள் 0775182548இற்கு தொடர்பு கொள்ளவும்.

சுன்னாகத்தில் அமைந்துள்ள சட்டத்தரணி ஒருவரின் அலுவலகத்தில் உறுதிகள் மற்றும் வழங்குகள் போன்றவற்றைத் தட்டச்சு செய்ய ஒருவர் தேவை. தமிழ், ஆங்கில மொழிகளில் கணினியில் தட்டச்சு செய்யத்தெரிந்திருத்தல் அவசியம் ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் 021 2241898 இற்கு தொடர்பு கொள்ளவும்

செலிங்கோ லைப் காப்புறுதி நிறுவனம் தனது யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சங்கானை, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, மல்லாகம், கிளிநொச்சி ஆகிய கிளைகளில் விற்பனை ஆலோசகர், விற்பனை அதிகாரி, எழுது வினைஞர் ஆகிய பதவிகளில் ஆளணி வளத்தை அதிகரிக்கவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் 23.11.2011 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேர்முகத்தேர்வுக்கு தயாராக செலிங்கோ லைப் யாழ். பிராந்திய கிளை, 560, ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம், (செலான் வங்கி 2ஆம் மாடி) என்ற முகவரிக்கு சமூகம் தரவும்.

நெல்லியடியில் உள்ள பார்மசி ஒன்றுக்கு அனுபவமுள்ள வேலை ஆள் தேவை அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது ஆர்வமுள்ளவர்கள் 0771267222 இற்கு தொடர்புகொள்ளவும்.

சூரிய மின்கலம் விற்பனை முகவர்கள் மற்றும் வயரிங் செய்பவர்கள் தேவை ஆர்வமுள்ளவர்கள் சூரியவாஹினி சோலர் நிறுவனம், 13ஆம் கட்டை முல்லை வீதி, றெட்பானா, விசுவமடு 0773885588 இற்கு தொடர்புகொள்ளவும்.

இலங்கை அரச மருத்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் மருந்தாளர் (எம்.ஏ.2.1) தரம் iii, களஞ்சிய காப்பாளர் (எம்.ஏ.-1.1) தரம் iii, காசாளர் (எம்.ஏ-1.1) தரம் iii ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் வயது, தகமைகள், பயிற்சி, வேலைஅனுபவம், தற்போது வசிக்கும் பதவி, சம்பள அளவு, முன்பு பதவி, முன்னைய தொழில் வழங்குனர்களிடம் சேர்ந்த மற்றும் விலகிய திகதிகள் ஆகியவற்றுடன் உறவினரல்லாத இரண்டு பேர்களின் பெயர் மற்றும் முகவரிகளைக்கொண்ட சுயவிபரப்பத்திரம் ஒன்றையும் இணைத்து எதிர்வரும் 30.11.2011 இற்கு முன்பதாக பிரதி பொது முகாமையாளர் மனித வளம் மற்றும் நிர்வாகம் இலங்கை அரசு மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், 75 சேர் பரோன் ஜயதிலக மாவத்தை கொழும்பு -01 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும் குறிப்பு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியை தெளிவாக குறிப்பிடவும்.

வெள்ளவத்தையில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர், உதவிக்கணக்காளர் தேவை, ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பத்தை MNP Accountants No.6, 32nd lane co1-06 அல்லது Info emnpaccountants. co.uk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

கையடக்க தொலைபேசி பொருத்தும் ஆண்கள் தேவை பயிற்சியுடன் 45000வரையான சம்பளம் மற்றும் 20 பணிப் பெண்கள் தேவை ஆர்வமுள்ளவர்கள் 0779296986 என்ற எண்ணிற்கு தொடர்புகொள்ளவும்.

Abans நிறுவனத்தின் கைதொலைபேசி நிறுவனத்தில் காசாளர் கைப்பேசி தொழில் நுட்பவியலாளர்கள் தேவை ஆற்றல் உள்ளவர்கள் உறவினர் அல்லாத இருவருடைய சிபாரிசுடன் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் HR Pepartment,Abans office Automation (put) ltd 498 Gelle road col-03 என்னும் முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவும்.

ஊர்காவற்றுறை மருத்துவ பீட வளாகத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டட வேலைகளுக்கு மேசன், தச்சுத் தொழிலாளர்கள், பொருத்துநர் மற்றும் ஒட்டுநர், சாதாரண கூலி ஆட்கள் தேவை. ஆற்றலும் ஆர்வமுள்ளவர்கள் யூரோலில் 45 காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

யாழ். நகரில் அமைந்துள்ள இன்ரநெற் கபே ஒன்றுக்கு கணினித்திருத்துபவர் தேவை ஆர்வமுள்ளவர்கள் 0788307100 இற்கு தொடர்பு கொள்ளவும் இன்ரநெற் கபே உடன் தொடர்பான வேலைகள் அறிந்திருத்தல் அவசியம்.

முதன் அதிகாரி (CEO) 45-60 வயதிற்கு உட்பட்ட வியாபார முகாமைத்துவ பட்டதாரி மற்றும் அனுபவமுள்ளவர், புனித பூமி சிறுவர் இல்லத்திற்கு இயக்குனர் ஓய்வு பெற்ற ஆசிரியர் விரும்பத்தக்கது. வன்னியில் செய்திகள் உடனுக்குடன் எழுதக் கூடியவர் தேவை ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் 0712141128, Nerdo A9 Road, 2ஆம் கட்டை இரணைமடுச்சந்தி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

# வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்தி

வடமாகாணத்தின் 30 ஆண்டுகால யுத்தநிலை கல்வியின் தரத்தினையும், வளர்ச்சியினையும் பாதித்துள்ள நிலையை மதிப்பிட்ட, வட மாகாணத்தின் கல்வியியலாளர்கள் மேற்படி நிலை எதிர்காலச் சமுதாய வளர்ச்சியைப் பாதிக்க இருக்கும் தன்மையினையும், அது வளர்த்தெடுக்கப் படல் வேண்டும் என்பதனையும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

அதன் நிமிர்த்தம் 05.11.2011 அன்று கல்வியியலாளர்களின் சந்திப்பு ஒன்றினை அமைச்சு அலுவலகத்தில் நடாத்தியதுடன் ஒவ்வொரு கல்வி வலயத்திற்கும் 15 பேர்கொண்ட கல்வி அபிவிருத்திக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. மேற்படி குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர்கள் என வடமாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுவின் நிர்வாக உறுப்பினர்களாகவும் தலைவர், செயலாளாகளாகவும் இருப்பர் எனத் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கான குழு -நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் அமைகக்கப்பட்டு, அப்பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன.

மேற்படி கல்வி அபிவிருத்திக்குழு, வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்கு சீர்செய்யப்பட வேண்டிய நிர்வாக, கல்வி அபிவிருத்தி தொடர்பான விடயங்களை அடையாளப்படுத்தி, செயற்திட்ட அறிக்கையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கையளித்ததன் பிரகாரம்



அமைச்சர் அவர்கள் வட மாகாண ஆளுநர் அவர்களின் கவனததுக்கும், ஆலோசனைக்கும் மேற்படி விடயங்களைக் கொண்டு சென்றார்.

இதன்படி 19.11.2011 சனிக்கிழமை 3 மணிக்கு வட மாகாணத்தின் மாகாணக்கல்விப் பணிப்பாளர் கல்விச் செயலாளர், 12 வலயக்கல்விப் பணிப்பாளர்கள், 34 கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் வலயங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள். பொறியியலாளர்கள் நிர்வாக அதிகாரிகள், கல்வி அபிவிருத்திக் குழுக்களின் பிரதிநிதிகள், ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார், உதயன், யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோா கலந்துகொண்டனர்.

மேற்படி நிகழ்வின் ஆரம்ப உரையினை ப.விக்னேஸ்வரன் (வ.மா.க.ப) நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றியதுடன், கல்வி அபிவிருத்தி தொடர்பான அறிக்கையினையும் வெளியிட்டு உரையாற்றினார்.

அவரது உரையில் இக்கூட்டம்

**இரா.செல்வவடிவேல்,**
**கல்வி அபிவிருத்திக் குழு உறுப்பினர்.**

கூட்டப்பட்டதற்கான காரணம் முழுக்க, முழுக்க வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்துவதே என்றும், யாரையும் குறை கூறவோ, பிழை பிடிக்கவோ அல்ல என்றும் கூறியதுடன் இங்கு கூடியிருக்கும் அனைவரும் இணைந்து மேற்படி பிரச்சினைகளுக்கு இயலுமான வரை தீர்வுகாண வேண்டும் என்றார்.

செயற்றிட்ட அறிக்கை முன்னிலைபடுத்தும் போது நாடாளுமன்றக் குழுககளின் பிரதித் தலைவர் சந்திரகுமார் அவர்களும் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்தார். குறிப்பாக வன்னி பாலட்டப் பிரச்சினைகளை [illegible] கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறினார்.

அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு பிரச்சினைகளுக்குமான தீர்வுகள் தொடர்பாக ஆளுநர் அவர்களும், அமைச்சர் அவர்களும் இடையிடையே உரையாற்றினர். சபையோரது சுதந்திரமான கருத்துக்கள் பெறப்பட்டதுடன், ஒவ்வொரு பிரச்சினைகளின் தீர்வுக்கான முடிவுகளும் கல்வியியலாளர்கள் அதிகாரிகளின் ஏகமனதான முடிவைப் பெற்றே எடுக்கப்பட்டது.

அதிகாரிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற மேற்படி கலந்துரையாடல் ஒவ்வொரு தவணையிலும் நடத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டது. இதற்குப் பதில் அளித்த அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டு தைப்பொங்கலுடன் இத்தீர்மானங்களின் மீளாய்வுக் கூட்டத்தை நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டதுடன், இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமைச்சர் அவர்களும், ஆளுநர் அவர்களும் இணைந்து 31.11.2011 இற்கு முன் நிறைவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். சில பிரச்சினைகளை மத்திய அரசின் நாடாளுமன்றத்துடனும் ஜனாதிபதியுடனும் ஆலோசனை செய்து தீர்வு பெற்றுத் தருவதாக இருவரும் உறுதியளித்தனர்.

(நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நாளைய தினமுரசில்)



யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை பீட மாணவர்களின் வருடாந்த Macos (கலாசார, கலை, விளையாட்டு நிகழ்வு) நிகழ்வில் மாணவர்கள் இரத்ததானம் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்:- பா.சிகான்)

# ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது ஆபத்தானதாக அமையக்கூடும்



(கொழும்பு)

ஊடகங்களை கட்டுப்படுத்துவது ஆபத்தாக அமையக்கூடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர். விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வைத்தியத்துறை, பொறியியற்துறை போன்றே ஊடகங்களுக்கும் ஒழுக்க விதிகள் காணப்படுகின்றன. மக்களின் நலனை முதனிலையாகக் கொண்டு தொழில்சார் ஒழுக்க விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஊடகத்துறையைச் சேர்ந் தவரகளை குற்றவாளிகளைப் போன்று கருதி ஒழுக்க விதிகளை உருவாக்குவது ஆபத்தாக அமையக் கூடும்.

நாடுகளில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் சுய ஒழுக்க விதிகளைப் பின்பற்றி இயங்குவதற்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது, அவ்வாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டால் பாரிய பின்விளைவுகள் ஏற்படக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.


டியூனிசியா முதல் லிபியா வரையில் பாரியளவில் கிளர்ச்சி வெடித்து ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டமைக்கான பிரதான ஏதுவாக மக்களின் தகவல் அறிந்து கொளளும் உரிமை முடக்கப்பட்டமையை குறிப்பிடலாம்.

தகவல் அறிந்து கொள்ளும் மக்களின் உரிமை முடக்கப்பட்டால் அவர்கள் வேறு வழிகளில் தகவல்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பார்கள்.

அதேபோன்று போலியான திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை வெளியிடுவதனை ஊடகங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மை அளிக்கக் கூடியவகையில் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் ஊடகங்கள் செயற்பட வேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பல்வேறு பற்றாக்குறைகளுடன் தொழிலில் ஈடுபடும் முல்லை மீனவர்கள்



முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்கள் கடலுக்குள் செல்வதில் இருந்த பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருக்கின்ற போதிலும் பல்வேறு பற்றாக்குறைகளுக்கு மத்தியிலேயே தொழில் செய்ய வேண்டியிருப்பதாக முலலைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சிறிஸ்கந்தராசா அருள் ஜெனிபட் தெரிவித்துள்ளார்.

தொழில் செய்வதற்கு ஆர்வம் இருக்கின்ற போதிலும், அதற்குரிய படகுகள், போதிய வலைகள், இயந்திரங்கள் இல்லாதிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் ஆரம்பமாகி ஒன்றரை வருடங்களுக்கு மேலாகின்றது. எனினும் பல பிரதேசங்களில் இன்னும் மீள்குடியேற்றம் அனுமதிக்கப்படாத காரணத்தினால் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மீனவக் குடும்பங்களே தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பியுள்ளன.

இந்தக் குடும்பங்கள் மீள்குடியேறிய ஒழுங்கிற்கு அமைய அரசாங்கமும், தொண்டு நிறுவனங்களும் கட்டம் கட்டமாக உதவிகளை வழங்கி வருகின்றன. இதனால் ஒரே நேரத்தில் எல்லோருக்கும் உதவிகள் கிட்டவில்லை.

மீனவர்களுக்குரிய படகுகள் போதிய வலைகள் மற்றும் உபகரணங்கள் கிடைக்காத காரணத்தினால் பெரும்பான்மையானவர்கள் கூலித் தொழில் செய்தே தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள்.

கடும் சண்டைகள் நடைபெற்ற இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் வெறும் கையுடன் தமது கிராமங்களுக்குத் திரும்பியிருப்பதனால், தமது வாழ்வாதாரத்திற்கு அரசாங்கத்தினதும் தொண்டு நிறுவனங்களினதும் உதவியையே நம்பியிருக்கின்றனர்.

ஆயினும் போர்ப்பிரதேசங்களில் இருந்து எடுக்கப்பட்ட படகுகளை அரசாங்கம் திருத்தம் செய்து மீனவர்களுக்கு வழங்கியுள்ளவை உட்பட தொண்டு நிறுவனங்களினாலும், அரசாங்கத்தினாலும், இதுவரையில் சுமார் 300 படகுகளே மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மீனவர்களுக்குரிய படகுகள் உள்ளிட்ட உபகரணங்களை வழங்கியுள்ளதுடன், தொண்டு நிறுவனங்களும் உதவி வருவதுடன் மீனவர்களுக்குரிய தொழிற் பயிற்சிகளையும் வழங்கி வருவதாக கடற்தொழில் உதவிப் பணிப்பாளர் டேவிட் திருஞானரட்ணம் தெரிவிக்கின்றார்.

# “கோப்” குழுவின் அறிக்கை டிசம்பரில் நாடாளுமன்றுக்கு

(கொழும்பு)

கோப் குழுவின் அறிக்கை டிசம்பர் மாதம் முதலாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது என பொது முயற்சிகளுக்கான நாடாளுமன்ற செயற்குழுவின் (கோப்) தலைவரும், சிரேஷ்ட அமைச்சருமான டி.யூ.குண சேகர தெரிவித்துள்ளார். 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் கணக்காய் வாளர் அறிக்கை தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கை நடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டதும் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு அது குறித்து கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கப்படும்.

கோப் குழுவின் கீழான சகல அரச நிறுவனங்கள் தொடர்பிலும் இம்முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 299 அரச நிறுவனங்கள் குறித்து இம்முறை கணக்காய்வு அறிக்கை வெளியி டப்படவுள்ளது.

கணக்காய்வாளர் அறிக்கையை அடிப்படை யாகக் கொண்டு சிக்கல் நிலவுகின்ற சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரிகளிடம் அது குறித்து விசாரணை நடத்தியிருப்பதாக அமைச்சர் கூறினார். இது தொடர்பாக ஆய்வுகளின் போது அரச நிறுவனங்கள் பலவற்றின் ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டார்.

# ஞானோதய வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பு



(அளவெட்டி)

அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒலி பெருக்கி சாதனங்கள் பாடசாலை அதிபர் ந. அமிர்தலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

1998 இல் இப்பாடசாலை முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் புதிய கட்டடம் 2000 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

இதன் அடிப்படையில் தமது பாடசாலையை மீண்டும் ஓர் சிறந்த பாடசாலையாக உருவாக்க வேண்டும் என்பதற்காக ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்க கிளையினர் பாடசாலை அபிவிருத்திக்கான செயலணி ஒன்றை உருவாக்கினர். இச்செயலணியே தற்போது பாடசாலையை முன்னேற்றுவதற்கான பலவேறுபட்ட செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதன் ஒரு அங்கமாக இவ் ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (15)

# உடையார்கட்டுப் பகுதியில் ஊடறுத்துப் பாயும் வெள்ளம்

(புதுக்குடியிருப்பு)

உடையார்கட்டில் மதகு ஒன்றின் மேலால் பாதையை ஊடறுத்து மழைநீர் மேவிப் பாய்வதினால் பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகள் போக்குவரத்தை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் மூங்கிலாற்றுக்கும் உடையார்கட்டுக்கும் இடையில் உள்ள மதகின் ஊடாகவே மழைநீர் மேவிப் பாய்கிறது.

கடும் மழை பெய்யும் வேளையில் மழைநீர் அதிகமாகப் பாயும் போது பிரதான பாதையூடாகவே போக்குவரத்து செய்வது நீண்ட காலமாக மிகவும் சிரமமாக இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (அ.ப)

## பிரச்சினைகளை...

கூட்டமைப்பு புலிகளின் ஆதரவுக் கட்சியாகும். எனவே அதன் கருத்துக்கள், கோரிக்கைகள் புலிகளை மையப்படுத்தியதாகவே அமைந்திருக்கும் என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் இராணுவமயம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கூட்டமைப்பினர் அமெரிக்கா உட்பட்ட நாடுகளுக்கான தமது விஜயத்தின் போது விடுத்த கோரிக்கை தொடர்பாகவே ஜெகத் ஜெயசூரிய இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

இராணுவம் வடக்கு கிழக்கில் கைவிடப்பட்ட பாடசாலைகளிலேயே முகாமிட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ள ஜெயசூரிய, அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பளிக்கும் கடமையை இராணுவம் கொண்டிருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வரவு செலவுத்...

சம்பள உயர்வுகள் குறைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை இலங்கையின் வரவுசெலவுத்திட்டம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் பேரில் செலவுகளை குறைக்கும் வகையிலேயே கடந்த சில ஆண்டுகளாக தயாரிக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கு கிடைத்து வரும் 2 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியின் கீழ் இன்னும் தவணைக் கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டியுள்ளன.

எனவே அதனை நோக்காக கொண்டே 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புலம்பெயர்ந்தவர்களின்...

80 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார்.

சட்டவிரோதமாக காணியைக் கைப்பற்றி விற்பனை செய்த வர்த்தகர் கதிர்காமத்தில் 100 அறைகளைக் கொண்ட விடுதி ஒன்றை அமைத்து வருவதுடன் தொழிற்சாலைகளுடன் கூடிய மூன்று தேயிலைத் தோட்டங்களையும் சொந்தமாக வைத்துள்ளார்.

வெளிநாடு சென்றிருந்த வர்த்தகரும் ஏனைய எட்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட போது ஜனவரி 4 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக சொத்துக்களை எவரேனும் பறிமுதல் செய்திருந்தால் அதுபற்றி குற்றப்புலனாய்வுப் பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

# அடிப்படை வசதிகளின்றி புதுக்குடியிருப்பு சந்தை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில் இயங்கும் சந்தை அடிப்படை வசதியற்ற நிலையில் காணப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

பாண்டியன் சந்திக்கு அருகாமையில் இயங்கும் இச்சந்தையானது போக்குவரத்து செய்யும் வீதியின் முன்னரங்க நிலையில் அமைந்திருப்பதனால் விபத்துக்கள் ஏற்படும் நிலை காணப்படுகிறது.

அத்தோடு, மரக்கறி விற்பனைப் பகுதியை அண்மித்ததாக மீன் விற்பனைப் பகுதியும் இருப்பதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவும் நிலையும் காணப்படுகிறது. (அ.ப)

## அடுத்த...

பெரும் அபிவிருத்தி திட்டங்கள் பல 2014 இல் நிறைவடையவுள்ளதால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான காலம் 2014 ஆம் வருடமென்று அமைச்சர்கள் பலர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கூட்டமைப்பு...

பெரும்பாலானோரே அரசாங்கத்தில் இணையவுள்ளனர் என்றும் இவர்களில் கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களும் அடங்குவர் என்றும் அந்த இணையம் தெரிவித்துள்ளது. அத்துடன் சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் இவர்களில் அடங்குவர் என்றும் அந்த இணையம் தெரிவித்துள்ளது.

# கட்சியின் தலைமைப் பொறுப்பை கருஜயசூரியவிடம் வழங்க வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ரணில் விக்ரமசிங்க கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து உடனடியாக விலகி, அப்பதவியினை கருஜயசூரியவிடம் ஒப்படைக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கட்சியில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டியது அவசியம் எனவும் உடனடியாக கட்சி பொதுச் சபை கூட்டப்பட்டு தலைமைப் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். தற்போதைய தலைமைத்துவம் எடுக்கும் தீர்மானங்களினால் கட்சி நாளுக்கு நாள் வீழ்ச்சிப் பாதையில் செல்வதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# பொன்சேகாவின் விடுதலைக்கு வெளிநாடுகளிடம் உதவி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக உள்நாட்டில் மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதுடன், வெளிநாடுகளிலும் பிரசாரங்களை மேற்கொண்டு ஒத்துழைப்பைக் கோருவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளின் பெயர் விபரங்களை வெளியிடாத அரசாங்கம் பயங்கரவாதத்திற்காக பணம் வழங்கிய கே.பியை சுக போகங்களுடன் பாதுகாக்கின்றதென்றும் தெரிவித்தார்.



கொழும்பு தெமட்டகொடை சந்தியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

## யாழில் சிறுவன் மீது...

இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த சிறுவன் வேலை தேடிச் சென்ற நிலையில் கண்டி வீதியிலுள்ள குறித்த உணவகத்தில் வேலை கிடைத்துள்ளது. இதன் போது உணவகத்தில் வேலைசெய்யும் சமையற்காரரால் சிறுவன் மீது துஷ்பிரயோக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கிருந்து தப்பிய சிறுவன் யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த சந்தேகநபரை கைதுசெய்த பொலிஸார் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

# ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள....

கடல்சார் பாதுகாப்பு, மனிதாபிமான உதவிகள், பேரழிவுகளுக்காக உதவிகள் போன்ற பாதுகாப்பு ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

எவ்வாறாயினும், இந்த ஏற்பாடுகள் மனித உரிமைகள் நிலைமையைப் பொறுத்தே அமையும் என்றும் இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டிள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒருவாரம் முன்னதாக மீண்டும் மீண்டும் கூறப்பட்ட அமெரிக்காவின் இந்தச் செய்தி மிகவும் முக்கியமானது.

அதுவும் மனித உரிமைகள் பற்றிய விவகாரங்கள் அதிகம் கரிசனைக்கு எடுத்துக் கொள்ளப்படாத கூட்டம் ஒன்றில் தான் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கொமன்வெல்த் மாநாட்டுக்காக பேர்த் சென்றிருந்த போது, நாடாளுமன்றத்தின் மூலம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடப்போவதாக கூறியிருந்தார்.

ஆனால் இந்த அறிக்கையை அவர் முழுமையாக கையளிப்பாரா அல்லது முக்கிய விவகாரங்கள் தொடர்பான கண்டறிவுகள் மற்றும் பரிந்துரைகள் பற்றிய சில பகுதிகளை மட்டும் வெளியிடுவாரா என்பது பற்றி இன்னமும் தெளிவாகவில்லை.

உயர்மட்ட அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில், அறிக்கையைப் பகுதியாக வெளியிடுவதற்கே வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாக கூறியுள்ளன.

400 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள உணர்ச்சிபூர்வமான தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படாது.

அதேவேளை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இந்த அறிக்கை குறித்து கேள்வி எழுப்புவதற்கு பல மேற்கு நாடுகள் காத்திருக்கின்றன.

அடுத்த சில வாரங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பல பணிகள் காத்திருக்கின்றன. இன்று அவர் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளார்.

அதன்பின்னர் அவர் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து நாடாளுமன்றத்தில் அதனை எந்தவகையில் சமர்ப்பிப்பது என்று முடிவு செய்வார். மிகமுக்கியமாக, தொடர் நடவடிக்கை குறித்து அவர் முடிவு செய்ய வேண்டியுள்ளது.

ஆணைக்குழுவின் சில உறுப்பினர்கள், தமது இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாதுள்ளது குறித்து வெறுப்படைந்துள்ளனர்.

இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியிருந்தால், கொலன்னாவவில் கடந்தமாதம் 8 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்காது என்று ஆணைக்குழுவுடன் நெருக்கமான ஒருவர் தெரிவித்துள்ளார் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## இன முரண்பாடுகளைக்...

மாலை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

அலரி மாளிகையில் இடம்பெற்ற அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வில் ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர். டி சில்வா ஜனாதிபதியிடம் அறிக்கையைக் கையளித்தார்.

கையளிக்கப்பட்ட அறிக்கையை ஜனாதிபதி செயலகம் ஆய்வு செய்ய உள்ளதாகவும் அதன் பின்னர் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றில் சமர்ப்பித்ததன் பின்னரே அறிக்கை பொது மக்களுக்கு அம்பலப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 400 பக்கங்களைக் கொண்டது எனக் குறிப்பிடப்படுகிறது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சில பரிந்துரைகளை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தனது அறிக்கை மூலம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் பற்றியோ அல்லது சம்பவங்கள் பற்றியோ உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தகவல்களை வெளியிடவில்லை.

சனல் 4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட ஆவணப்படம் முற்றிலும் திரிபுபடுத்தப்பட்ட ஓர் போலி ஆவணம் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சகல இன சமூகங்களுக்கும் இடையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் இதில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

# ஆணைக்குழுவின் அறிக்கை இராஜதந்திரிகள் ஆலோசனை

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து கொழும்பிலுள்ள சர்வதேச இராஜதந்திரிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று கையளிக்கப்பட்ட நிலையில், கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதரகத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவது அவசியமானது என்பதால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தாம் எதிர்பார்த்திருப்பதாக அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராஜதந்திரிகள் இக்கூட்டத்தில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இப்போரின்போது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு வருத்தம் தெரிவிப்பது குறித்தும், அவர்களுக்கு இழப்பீடுகள் கொடுப்பது குறித்தும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்படுவது அவசியம் எனவும் இவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இத்தகைய விடயங்களைக் கொண்டிருக்காவிடில், அது சர்வதேச சமூகத்தை திசை திருப்ப மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகவே கருதப்படும் என இவ்விரு நாடுகளின் இராஜதந்திரிகளும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, உண்மைகளைக கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாக பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் அவர்கள் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.


இந்நிலையில், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா, ஐரோப்பிய ஒன்றியம், மற்றும் இந்தியா போன்ற நாடுகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இரகசியமாக இருக்கக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளன.

# 6000 ஓய்வூதியர்களுக்கு கொடுப்பனவு இல்லை

அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ள சுமார் 6 ஆயிரம் பேருக்கு கடந்த 4 மாதங்களாக ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர்களுள் பெரும்பாலானவர்கள் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கிறார்.

ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதற்காக ஒதுக்கிடப்பட்ட நிதி முடிவடைந்தமையே இதற்கு காரணம் என ஓய்வூதியத் திணைக்களம் கூறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆவணங்களின்றி செலுத்தப்படும் 49.சி.சி. மோ.சைக்கிள்கள் பிடிப்பு



கடந்த மூன்றுதினங்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 150 இற்கும் மேற்பட்ட 49.சி.சி. மோ.சைக்கிள்கள் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் நேற்று மட்டும் 60 இற்கும் மேற்பட்ட மோட்டார சைக்கிள் யாழ். நகரப்பகுதியில் இடம்பெற்ற சோதனையில் பிடிக்கப்பட்டதாக யாழ். நகரப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தலைக்கவசம், அனுமதிப்பத்திரம், இலக்கத்தகடு இன்றி பயணம் செய்த மோ.சைக்கிள்களே இவ்வாறு பிடிக்கப்பட்டன. இது தொடர்பாக இதனைப் பயன்படுத்துவோர் அது குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருந்தும் பொருட்படுத்தவில்லை. இதனால் விபத்துக்கள் அதிகரித்தன. விபத்து நடந்தால் விபத்தினைக் கண்டறிய குறித்த மோட்டார் சைக்கிளுக்கு ஆவணங்கள் இன்மையால் சிரமம் ஏற்பட்டது. இது கடந்த காலம் நாம் எதிர்கொண்ட சவால்.

எனவே இவ்மோட்டார் சைக்கிள் வைத்துள்ளவர்கள் உரிய ஆவணங்களைப் பெறல் அவசியம் என்றார். பறிமுதல் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(எப்எஸ்)

# தொடரை வென்றது பாகிஸ்தான்



பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கிடையில் டுபாயில் நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் 26 ஓட்டங்களால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி தொடரைக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அவ்வணி 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக அப்ரிடி - 75 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் 30 இற்கும் குறைவான ஓட்டங்களையே பெற்றனர். பந்துவீச்சில் பெர்னான்டோ - 3, மென்டிஸ், பிரசன்ன தலா 2, மலிங்க, பெரேரா தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என சுலபமான இலக்கை விரட்டுவதற்கு களமிறங்கிய இலங்கை அணியில் சங்ககார, ஜெயவர்த்தன இருவரும் நம்பிக்கை அளித்தபோதிலும், ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததனால் இலங்கை அணி 45.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியதுடன், தொடரையும் இழந்தது. இலங்கை அணி சார்பாக சங்ககாரா - 58, ஜெயவர்த்தன - 55 ஓட்டங்களைப் பெற்ற போதிலும், ஏனைய வீரர்கள் பிரகாசிக்கவில்லை.

பந்துவீச்சில் அப்ரிடி -5, அஜ்மல், சீமா தலா 2, ஹபீஷ் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவானார்.

# மதுபோதையிலிருந்த இளைஞர் பள்ளிவாசலில் ரகளை

யாழ். நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றில் குடிபோதையில் ரகளையில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 7.30 மணியளவில் நடைபெற்றது. சந்தேகநபர் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த கிசோக் (20) என்பவர் குறித்த பள்ளிவாசலில் உள்ள நீர்த்தடாகத்தில் நீரினை அள்ளி வீசி அவ்விடத்தில் உள்ளவர்களை அச்சுறுத்தியுள்ளார்.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளான். சம்பவம் குறித்துப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு, இன்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப படவுள்ளார். (எப்.எஸ்)

# நிலநடுக்க கடற்பகுதியில் ஆய்வு நடத்தத் திட்டம்

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்ட கடற் பரப்பில் விசேட ஆய்வுகளை மேற்கொள்ள எண்ணியுளளதாக புவி சரிதவியல் அளவை திணைக்களம் தெரிவிக்கிறது.

அந்த கடற்பரப்பு தொடர்பில் தற்போதுள்ள தகவல்களை பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளபபடவுள்ளதாக பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.பி.விஜயானந்த கூறியுள்ளார்.

கொழும்பிலிருந்து சுமார் 342 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்டிருந்த நில நடுக்கத்திற்கான காரணம் ஏற்கனவே அந்த பகுதியில் நிலநடுக்கங்கள் ஏற்பட்டிருந்தனவா? போன்ற விடயங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 4.10 அளவில் ரிச்டர் மானியில் 4.7 ஆக பதிவான நிலநடுக்கத்தின் அசைவுகள் பலப்பிட்டி பிரதேசத்தில் உணரப்பட்டுள்ளதாக புவி சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது

## கிணற்றில் வீழ்ந்து வயோதிபர் மரணம்

குடிபோதையில் இருந்த நபர் தவறி கிணற்றில் விழுந்ததால் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுன்னாகம் சந்தை வீதியைச் சேர்ந்த இராமசாமி சின்னை (65) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது சடலம் நேற்று மாலை பிரேத பரிசோதையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எப்.எஸ்)

# பொன்சேகாவிற்கு ஆதரவாக தீர்ப்பளித்த நீதவானுக்கு நெருக்கடி

வெள்ளைக்கொடி வழக்கில் முன்னாள் இராணுவத் தளபதி சரத பொன்சேகாவிற்கு ஆதரவாக தீர்ப்பளித்த நீதவான் டபிள்யூ.ரீ. எம்.பீ.பி. வீரவெளவிற்கு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். நீதவானுக்கு ஏற்கனவே நெருக்கடிகள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தெமட்டகொட பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நீதவான் வீரவெள பயன்படுத்தும் கணினி சேதப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்போவதாக அவர் தெரிவிததுள்ளார். மதிப்பிற்குரிய நீதவானின் தீர்ப்பை அறிவிப்பதற்கு நீதிமன்றில் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதவான் குழாமில் மாறுப்பட்ட கருத்துக்கள் நிலவினால் வழமையாக அனைத்து வகையான தீர்ப்புக்களும் நீதிமன்றில் வாசிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளைக் கொடி வழக்கில் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக தீர்ப்பளித்த நீதவான் வீரவெளவின் தீர்ப்பு வாசிக்கப்படவில்லை எனவும், இது நீதிமன்ற மரபுகளுக்கு புறம்பானது எனவும் அவர் சுட்டிக காட்டியுள்ளார்.

# குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொள்ளவில்லை

## திஸ்ஸநாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொள்ளவில்லை என சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடம் பொதுமன்னிப்பு கோரும் நோக்கில் தாம் குற்றச் சாட்டுக்களை ஒப்புக்கொண்டு அதற்காக கடிதம் ஊடாக வருந்தி மன்னிப்புக் கோரியதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுளளார்.

அண்மையில் சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் குழு அமர்வுகளில் கலந்து கொண்ட முன்னாள் சட்ட மா அதிபரும், அரசாங்கத்தின் சட்ட ஆலோகருமான மொஹான் பீரிஸ், திஸ்ஸநாயகம் மன்னிப்பு கோரியதாக தெரிவித்திருந்தார்.

தமது குற்றச் செயல்களின் சிக்கல் தன்மையினை அறிந்து அதற்காக வருந்தி திஸ்ஸநாயகம், ஜனாதிபதியிடம் கடிதம் மூலமாக மன்னிப்பு கோரியிருந்தார் என அவர் குறிப்பிட்டிருந்தார.

எனினும், தாம் மன்னிப்பு கோரி கடிதம் அனுப்பி வைத்த போதிலும் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை என திஸ்ஸநாயகம் தெரிவித்துள்ளார்.

எனது .நடவடிக்கையினால் தனிப்பட்ட ரீதியில் எவருக்கேனும் நெருக்கடி ஏற்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்பு கோருவதாக கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியையோ அல்லது அரசாங்கத்தையோ நெருக்கடிக்கு உள்ளாக்குதல் குற்றச் செயல் என்பதனை நான் அறிந்திருக்கவில்லை. அந்தக் குற்றச் செயல்களில் தாம் ஈடுபடவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.